


32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 32 பாலம்: 12 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JUNE 15, 2022

# மீண்டும் பெரும்பான்மை அரசு அமைக்கும் டக் ஃபோர்ட்!

“செய்து முடி” (Get it Done) என்ற தேர்தல் சுலோகத்துடன் தேர்தல் களத்தில் இறங்கிய ஒன்ராறியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் ஊடகவியலாளர்கள் எதிர்பார்க்காத அளவு அதிகூடிய பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று ஒன்ராறியோ மாகாணத்தில் முதல்வராக மீண்டும் வெற்றி பெற்றார்.

2022 மே 3இல் ஒன்ராறியோ சட்ட சபையைக் கலைக்குமாறு ஒன்ராறியோ மாகாண ஆளுநர் Elizabeth Dowdeswellஐ கேட்ட டக் ஃபோர்ட் ஒன்ராறியோ மாகாண அரசின் 43ஆவது சட்டசபைக்கான பொதுத்தேர்தலை 2022 யூன் 2இல் எதிர்கொண்டார். இந்த ஒரு மாதகாலமும் ஊடகங்களாலும் மற்றும் நிறுவனங்களாலும் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் தொடர்ந்தும் ஒன்ராறியோ பழமைவாதக் கட்சியே மீண்டும் பெரும்பான்மை அரசை அமைக்கும் என எதிர்வு கூறப்பட்டாலும், பொதுவாக எல்லாக் கருத்துக்கணிப்புகளும் பழமைவாதக்கட்சி கடந்த பொதுத்தேர்தலில் பெற்ற ஆசனங்களைவிடக் குறைவான ஆசனங்களையே பெறும் என ஆரூடம் கூறியிருந்தன.

124 ஆசனங்களைக்கொண்ட ஒன்ராறியோ சட்டசபையில் 63 ஆசனங்களைப் பெறும் கட்சியே பெரும்பான்மை அரசை அமைக்கும் தகுதி பெறும்.

2022 யூன் 2இல் நடைபெற்ற தேர்தல் முடிவுகள்:
* பழமைவாதக்கட்சி 40.8% வாக்குகளைப் பெற்று 83 ஆசனங்களைப் பெற்றது.
* புதிய ஜனநாயகக்கட்சி 23.7% வாக்குகளைப் பெற்று 31 ஆசனங்களைப் பெற்றது.
* லிபரல் கட்சி 23.8% வாக்குகளைப் பெற்று 8 ஆசனங்களைப் பெற்றது.
* பசுமைக்கட்சி 6.0% வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தைப் பெற்றது.
* இவற்றைவிட ஓர் ஆசனத்தை சுயேட்சை வேட்பாளர் வென்றுள்ளார்.

இம்முறை நடைபெற்ற தேர்தல் முடிவுகளை ஆராயக் கடந்த தேர்தல் முடிவுகளை ஒப்பீட்டிற்காகப் பார்க்க வேண்டும். 2018 யூன் 7இல் நடைபெற்ற கடந்த தேர்தல் முடிவுகள்:



* பழமைவாதக்கட்சி 40.5% வாக்குகளைப் பெற்று 76 ஆசனங்களைப் பெற்றது.
* புதிய ஜனநாயகக்கட்சி 33.6% வாக்குகளைப் பெற்று 40 ஆசனங்களைப் பெற்றது.
* லிபரல் கட்சி 19.6% வாக்குகளை பெற்று 7 ஆசனங்களைப் பெற்றது.
* பசுமைக்கட்சி 4.6% வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தைப் பெற்றது.
இம்முறை தேர்தலில் 10.7 மில்லியன் மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். ஆனால், இவர்களில் 43.5%ஆனோரே அதாவது 4.6 மில்லியன் மக்களே வாக்களித்திருந்தனர்.

இது 2018ஆம் ஆண்டு நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணத்தேர்தலில் வாக்களித்தோரைவிட 13.5% குறைவானது. அதாவது, கடந்த இரண்டுமுறை நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணப் பொதுத் தேர்தல்களிலும் 50%இற்கு மேற்பட்ட வாக்காளர் தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர். அதற்கு முன்னர் 2011இல் நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணப் பொதுத்தேர்தலில் கூட 48.2%ஆனோர் வாக்களித்திருந்தனர். இதனால், இம்முறை நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணப் பொதுத் தேர்தலிலேயே மிகவும் குறைவான வாக்காளர் வாக்களித்திருந்தனர். தேர்தல் அறிவிப்பு வந்த நாளில் இருந்தே ஊடகங்கள் எல்லாம் பழமைவாதக்கட்சி அரசே மீண்டும் பெரும்பான்மை ஆசனங்களுடன் அரசை அமைக்கும் என்று தொடர்ந்து கூறிவந்ததால் பலர் தமது வாக்குகளை அளிப்பதில் ஆர்வம் அற்று இருந்திருக்கலாம் என இதற்கு ஒரு காரணம் கூறப்படுகிறது.

பழமைவாதக்கட்சிக்கு இம்முறை விழுந்த வாக்குகளின் எண்ணிக்கையை கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது 400,000 மட்டில் குறைவாக இருந்தாலும் அது கடந்த தேர்தலில் பெற்ற சதவீத வாக்குகளைவிட 0.3% அதிகமாகவும், கடந்த தேர்தலில் பெற்ற ஆசனங்களை விட 7 ஆசனங்கள் அதிகமாகவும் பெற்றிருக்கிறது. இதற்கு புதிய ஜனநாயகக்கட்சிக்கும் (23.7%), லிபரல் கட்சிக்கும் (23.8%) இடையே வாக்குகள் பிரிபட்டதும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.

புதிய ஜனநாயகக் கட்சிக்கு இம்முறை விழுந்த வாக்குகளின் எண்ணிக்கை கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது 800,000 மட்டில் குறைவாக இருந்ததுடன், அது கடந்த தேர்தலில் பெற்ற சதவீத வாக்குகளை விட 10% குறைவாகவும், கடந்த தேர்தலில் பெற்ற ஆசனங்களை விட 9 ஆசனங்கள் குறைவாகவும் பெற்றிருக்கிறது. இதற்கு கடந்த தேர்தலில் லிபரல் கட்சியின் முன்னாள் முதல்வர் Kathleen Wynneஇற்கு எதிராக வீசிய அலை தற்போது தணிந்திருந்தது ஒரு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

லிபரல் கட்சிக்கு இம்முறை விழுந்த வாக்குகளின் எண்ணிக்கை கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது 14,000 மட்டில் அதிகமாக இருந்ததுடன், அது கடந்த தேர்தலில் பெற்ற சதவீத வாக்குகளைவிட 4.2% அதிகமாகவும், கடந்த தேர்தலில் பெற்ற ஆசனங்களை விட ஓர் ஆசனம் அதிகமாகவும் பெற்றிருக்கிறது. கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகளில் இம்முறை

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

























RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in-Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Markham
$1,588,888
4+1 BR , 4 WR
Markham Rd/Denison St
SOLD
HIGHEST SOLD
PRICE ON THE STREET *
Semi-D- 4BR,4WR, Fin Bsmt,Sep E
Kingston Rd/ McCowan Rd
$2,899,000
Detached - BR: 5+5 WR:5
Lindsay
$399,000
Residential Land
Whitby
$1,098,900
Brand New - 3BR + 3WR
Midland Ave/ Kingston Rd
$659,900
2BR 2WR
Chinguacousy Rd & Wanless Dr
Brand New
Home in Brampton.
Closing Feb 2024.
$1,299,900
Semi-Detached BR: 3 WR: 4
Jane/Rutherford
FROM $ 599,000
10 UNITS
AVAILABLE
BR: 1 WR:1 Assignment Sale


WORK WITH THE BEST TEAM
GET YOUR HOME SOLD!
#1 HOMELIFE TEAM IN ONTARIO
SIVA & JOY
KNOWLEDGE • EXPERIENCE • SUCCESS
irealtorteam.com
futuregtahomes.com
SIVA
SHANMUGANATHAN
Broker
JOY
SELVANAYAGAM
Broker
SASIKUMAR
SHANMUGANATHAN
Broker
416.545.7482 416.709.5000
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905.201.9977



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# நாமும் நமது இல்லமும் 609

# ஆடம்பர அடுக்குமனை (Luxury Condo)



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் பெப்ரவரி 2022இற்குப் பிற்பாடு ஆதன விலையிலும், வியாபாரத்திலும் இறக்கம் இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது. கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் மூன்றாவது தடவையாக அதிகரிக்கப்பட்டு (யூன் 01, 2022) 1.5% ஆகக் காணப்படுகின்றது. இப்பெறுமதி கோவிட்-19இற்கு முற்பட்ட வட்டி வீதத்தை விட 0.25% குறைவாக உள்ளது.

கோவிட்-19இல் பணவீக்கம் அதிகரிக்கத் தொடங்கியது. கனடிய மத்திய வங்கியின் கணக்கு 1% தொடக்கம் 3%வரை ஆகும். ஏப்ரல் 2022 இப் பெறுமதி 6.8%ஆகக் காணப்பட்டது.

வட்டிவீத அதிகரிப்பால் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக வட்டி வீதம் தொடர்ந்து அதிகரிக்கப்படுகிறது. பொதுவாக வட்டிவீத அதிகரிப்பு ஆதன வியாபாரத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது.

ஆதனவிலை பெப்ரவரி 2022இல் அதி கூடிய விலையை அடைந்தது. அதன் பிற்பாடு விலையில், வியாபாரத்தில் இறக்கம் வருவதனைக் காணலாம். ஏப்ரல் 2022இற்கும் மே 2022இற்கும் இடையில் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 38.8% வியாபாரம் இறங்கியுள்ளது. அத்துடன் சராசரி ஆதன விலையும் $1,334,544 இலிருந்து ஏறத்தாழ 9% குறைந்து $1,212,806 ஆகக் காணப்படுகின்றது.

யூலை 13, 2022இலும் கனடிய மத்திய வங்கியின் வட்டி வீத அதிகரிப்பை எதிர்பார்க்கலாம்.

பொதுவாக வட்டி வீதத்தின் அதிகரிப்பு அல்லது இறக்கத்தின் பாதிப்பு 1½ வருடம் தொடக்கம் 2 வருடத்தில் தெரியவரும். எனினும், பொதுவாக ஆதன வியாபாரம் மந்தநிலையில் நடைபெறும்போது ரொறொன்ரோவிலும் அதனைச் சுற்றி யுள்ள ரொறொன்ரோ பெரும்பாகத்திலும் ஆடம்பர அடுக்குமனையின் வியாபாரமும் விலையும் அதிகரிப்பதனைக் காணலாம்.



தமது வீட்டில் இருந்தவர்கள், அவற்றை விற்றுவிட்டு அடுக்குமனைக்கு இடம் மாறுவதனால் அவ்வாறான மனைகளிற் குத் தட்டுப்பாடு ஏற்படுவதனைக் காணலாம். அத்துடன் புதிதாக நிர்மாணிக் கப்படும் ஆடம்பர அடுக்குமனைகள் அல்லது திருத்தப்பட்டு சிறப்பான நிலை யிலுள்ள அடுக்குமனைகள் இலகுவாக விற்கப்படுகின்றன. இதற்கு காரணமாக,

| MAY 2022 - GTA HOUSING MARKET STATS - BY REGION | TORONTO | YORK | DURHAM | PEEL | HALTON |
|---|---|---|---|---|---|
| Average Sales Price | $1,233,723 | $1,369,657 | $995,668 | $1,180,883 | $1,313,651 |
| Total # New Listings | 6,877 | 3,151 | 2,261 | 3,676 | 1,893 |
| Total # Sales | 2,678 | 1,100 | 1,025 | 1,377 | 826 |
| Avg. Listing Days On Market (LDOM) | 13 | 14 | 10 | 12 | 12 |
| YTD Increase | 15% | 19% | 25% | 22% | 20% |
| HOUSE TYPES & AVERAGE SALE PRICE | | | | | |
| Detached | $1,914,890 | $1,677,250 | $1,094,693 | $1,524,568 | $1,643,570 |
| Semi-Detached | $1,426,273 | $1,168,539 | $812,146 | $1,074,004 | $1,077,615 |
| Townhouse | $1,238,845 | $1,169,062 | $907,885 | $994,969 | $1,070,756 |
| Condo Apt | $792,723 | $780,703 | $633,509 | $661,237 | $790,342 |

Prepared By: Sivage Sivagumaran BROKER CPA, CGA, GUILD™, ABR, SRES, SRS, RSPS (Source: TRREB Data As of Jun/12/2022

ஆதன திருத்த வேலைகளிற்குத் தகுந்த வர்களைக் கண்டுபிடித்து வேலையை குறிப்பிட்ட காலத்தில் முடிப்பது என்பது இன்றைய காலத்தில் இலகுவாக இல்லை. இதனால் $1 மில்லியனுக்கு மேலான நிலையிலுள்ள அடுக்குமனைகள் இலகு வாக விற்கப்படுகின்றன.

உதாரணமாக ஆடம்பர வீடுகள் $4 மில்லியனிற்கு மேற்பட்ட விலையுள்ள வீடுகள் 2022இன் முதல் காலப்பகுதியில் (Quarter One of 2022)

- (ஜனவரி, பெப்ரவரி, மார்ச் 2022) ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வியாபாரம் 30%இனால் அதிகரித்துள்ளது. அத்துடன் $1 மில்லியனிற்கு மேற்பட்ட அடுக்கு மனைகளின் வியாபாரம் 120%இனால் அதிகரித்துள்ளது. ரொறொன்ரோவில் மட்டும் 72% அதிகரித்துள்ளது.

ஆடம்பர அடுக்குமனை வாங்குபவர்களின் எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது. புதிய வகையான (Modern) வழிவகைகளில் அமைக்கப்பட்ட மனைகளையே இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் $4 மில்லியனிற்கு மேற்பட்ட வியாபாரம் முந்தைய வருடத்தைவிட 30% அதிகரித்துள்ளது.

ஆடம்பர ஆதன வியாபாரம் (2022இன் முதல் காலப்பகுதி)

* ரொறொன்ரோவில் $4 மில்லியனிற்கு மேற்பட்ட வியாபாரம் 29% அதிகரித் துள்ளது.

* ரொறொன்ரோ பெரும்பாகத்தில் $1 மில்லியனிற்கு மேற்பட்ட அடுக்குமனை யின் வியாபாரம் 120%இனாலும், $4 மில்லியனிற்கு மேற்பட்ட, அடுக்குமனை வியாபாரம் 160%இனாலும் அதிகரித்துள்ளது.

* ரொறொன்ரோவில் $4 மில்லியனிற்கு மேற்பட்ட ஆதனம் 225%இனால் அதிகரித் துள்ளது. ஆனால், வன்கூவரில் $4 மில்லியனிற்கு மேற்பட்ட ஆதனம் 14% இனால் இறங்கி யுள்ளது. $1 மில்லியனிற்கு மேற்பட்ட ஆதனத்தின் வியாபாரம் கல்கரி, மொன்றியலிலும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், ஆதன விற்பனையில் இருந்த முதலீட்டாளர்கள் மற்றொரு சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்கின்றனர். இன்றைய நிலைமையில் முதலீட்டாளர் கள், பொதுவாக முதலீட்டை தவிர்ப்பர். தாம் குடியிருப்பதற்காக வாங்குவோர் எப்பொழுதும் வாங்கிக் கொண்டே இருப்பர்.




## அறிவோம் தெளிவோம்

எல்லோரிடமும் இணக்கமாக இருங்கள். ஆனால் ஒரு சிலரிடம் மட்டும் நெருக்கமாக இருங்கள். உங்களது முழு நம்பிக்கையை அவர்களிடம் வைக்கும் முன், அந்த ஒரு சிலரை நன்றாகச் சோதித்துப் பாருங்கள். உண்மையான நட்பு என்பது மெதுவான வளர்ச்சியுடைய ஒரு செடியாகும். அது முழு வளர்ச்சியைப் பெறுவதற்கு முன்னால் துன்பத்தின் அதிர்ச்சியை அனுபவிக்கவும் தாங்கவும் வேண்டும்.



- நிரஞ்சன்

# MORTGAGE & LINE OF CREDIT

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிறெடிட்(HELOC - No Income Required*)

⇒ **Private Mortgage** (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



## ஜெ(Jey)இராசதுரை

MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage & Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinic canada.com

**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students
$20per sign

# வடக்கின் விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்




அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில், உணவுப் பொருள் களை பதுக்கும் செயற்பாடுகளும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. இப் பதுக்கல் செயற்பாடுகள் தமிழ் பிரதேசங் களில் அதிகமாக நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இத்தட்டுப்பாடுகளுக்கும் பதுக்கல்களுக் கும் அரசியல்வாதிகளே காரணம் என்று கூறினால் அது மிகையாகாது. குறிப்பாக தற்போது பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் நாட்கள் குறித்த பயத்தை மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை தெரிவித்து வருகின்றார். பஞ்சம் வரும், பட்டினி நிலை உருவாகும், உணவுப் பொருள் களின் விலைகள் மேலும் வானளாவ அதிகரிக்கும் என்றெல்லாம் தெரிவித்து வருகின்றார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு மக்கள் எவ்வாறு முகம் கொடுப்பது- இந்த நிலையிலிருந்து மக்களைப் பாதுகாக்க என்ன நிவாரணங்களை வழங்கலாம்? இந்த சவாலுக்கு முகம் கொடுப்பதற்கு மக்களை எவ்வாறு தயார்படுத்தலாம் என்பது குறித்து அவர் எதனையும் கூறுவதில்லை. மக்கள் மனங்களில் நம்பிக்கையை விதைக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் அவர் அச்சத்தையே விதைத்து வருகின்றார்.

இதனை சொல்வதற்கா ரணில் விக்ரம சிங்க பிரதமர் பொறுப்பை ஏற்றார் என்று மக்கள் இன்று பேசிக்கொள்கின்றனர். விமல் வீரவன்ச கூறியதைப்போல, ரணில் விக்ரமசிங்க பிரதமர் பொறுப்பை ஏற்றதன் பின்னர் காலநிலை அவதான நிலையம் போன்று செயற்படுகின்றாரே தவிர பொதுமக்கள் எதிர்பார்த்த எதனையும் நிறைவேற்றவில்லை.

உதாரணமாக, அடுத்து வரும் நாட்களில் அரிசியின் விலை ஐந்நூறு ரூபாயைத் தாண்டலாம் என்று பொறுப்பான அரசியல் வாதிகளோ, அரசாங்கதிலுள்ள அதிகாரி களோ எதிர்வு கூறுகின்ற வேளைகளில் பணவசதி உள்ளவர்கள் அதிகளவு அரிசியை கொள்வனவு செய்து வீடுகளில் சேமித்து வைக்கின்றனர். வர்த்தகர்கள் விலை உயர்ந்தால் அதிக இலாபம் ஈட்டலாம் என்கின்ற நோக்கத்தில் பதுக்கி வைக்கின்றனர். வர்த்தகர்களின் இப் பதுக்கல் நடவடிக்கையை தடுக்க எவ்வித நடவடிக்கையும் இல்லை.



அண்மைய சில தினங்களில் குத்தரிசி எனப்படும் புழுங்கல் அரிசி கிலோ 350 ரூபாவிற்கு திடீரென உயர்ந்தது. தமிழ் பிரதேசங்களில், அதிகமாக உற்பத்தி செய்யப்படும் இந்த அரிசியின் விலை திடீரென உயர்ந்தமைக்கு எவ்வித காரணமும் இல்லை. கூட்டுறவுக் கடைகளிலும், பூட்சிற்றி போன்ற வர்த்தக நிலையங்களிலும் சமகாலத்தில் 250 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட குத்தரசி தனியார் விற்பனை நிலையங் களிலும், அரிசி ஆலைகளிலும் 350 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றன. சிவத்த பச்சை அரிசி 270 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இதேவேளை, வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி ஆகியவற்றிற்கான அதிக பட்ச சில்லறை விலையினை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி ஒன்று கடந்த 10ஆம் திகதி வெளியிடப்பட்டது.

வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி ஒரு கிலோ கிராம் 210 ரூபாவுக்கே விற்பனை செய்யப்பட வேண்டும் என குறித்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட் டுள்ளது. இந்த செய்தி வெளியான அடுத்த நாளே இந்த அரிசி வகைகளை கடைகளிலோ அரிசி ஆலைகளிலோ காணமுடியாமல் போய்விட்டது. குறிப்பாக வடக்கில் இந்த நிலை ஏற்பட்டது.

இப்பதுக்கல்காரர்களுக்கு எதிராக அரசாங்கம் விலைக் கட்டுப்பாட்டு பிரிவினரைக் கொண்டு கடும் நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் மக்கள் இதற்கு எதிராக வீதிகளில் இறங்கி போராட்டங் களை நடத்த வேண்டி ஏற்படும்.

இது ஒருபுறமிருக்க, வடக்கு கிழக்கில் விவசாயமும், மீன்பிடியும் முக்கிய தொழில்களாக உள்ளன. அதனை இக் காலகட்டத்தில் ஊக்குவிப்பதற்கான நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக நெல் உற்பத்தியையும், தோட்டச் செய்கையையும் ஊக்குவிக்க இயலுமான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். இதனை அரசாங்கமே செய்ய வேண்டும் என எதிர்பார்த்துக் காத்திருக்க முடியாது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவுள்ள அரசியல்வாதிகள் இதற்காகக் களத்திலிறங்க வேண்டும்.

போர் நடைபெற்ற காலங்களில் தமிழ் பிரதேசங்களில் பல்வேறு தடைகளை அரசாங்கம் விதித்திருந்தமை அனைவரும் அறிந்ததே. அத்தியாவசியப் பொருள் களுக்கு தடை விதிக்கப்பட்டதோடு உள்ளூர் உற்பத்திகளை முடக்க உரப் பசளைக்கான தடையையும் ஏற்படுத்தியது. அதனை எதிர்கொள்ள பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் 'உற்பத்திப் போர்' என்ற வேலைத்திட்டத்தை முன்னெடுத்தது. தமிழ் பிரதேசங்களில் குறிப்பாக வடக்கில் உள்ளூர் உற்பத்தியை அதிகரித்தது. யாழ்ப்பாணத்தில் தோட்டச் செய்கை அபரிமிதமாக இருந்தது.

இதற்கு காரணம் முறையான வேலைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டி ருந்தமையே ஆகும். விவசாயிகள், தோட்டச் செய்கையாளர்கள் ஒருங் கிணைக்கப்பட்டனர். பிரதேசங்கள், ஊர்கள் தோறும் விவசாயக் குழுக்கள் அமைக்கப்பட்டன. நேரடிக் கண்காணிப்பு கள் மூலம் இந்த உற்பத்தி நடவடிக்கை கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. சேதனப் பசளை உற்பத்தியும் மேற்கொள்ளப் பட்டது. இதனை இந்த நெருக்கடியான காலகட்டத்தில் ஏன் நடைமுறைப்படுத்த முடியாமலுள்ளது? வாய்ச்சொல் வீரர் களாக இருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் எவருமே இதற்காகக் களத்திறங்கி பணியாற்றும் நிலையில் இல்லை.

பயன்படுத்தப்படாத நிலங்களில் இராணுவம் விவசாய செய்கையில் ஈடுபடும் என்று இராணுவத் தளபதி அறிவித்துள்ளார். தமிழ் பிரதேசங்களில் பொதுமக்களின் காணிகளில் ஏற்கனவே இராணுவத்தினர் பயிர்ச்செய்கையை மேற் கொண்டு வருகின்றனர். மேலும் பயன் படுத்தப்படாத காணிகளை இராணுவத்தி னர் பொறுப்பேற்கலாம். அதன் பின்பு கூக்குரலிடுவதில் பயனில்லை.

சேதனப் பசளை தயாரிப்பதற்கான இயந்திரங்கள் வட பகுதிக்கு வந்துள்ள தாகவும் ஆனால், அவற்றை பயன்படுத்தி பசளை உற்பத்தி எங்கேனும் நடப்பதாகத் தெரியவில்லை என்றும் ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகத்தரும் சமூக செயற் பாட்டாளருமான ஒருவர் கூறுகின்றார். சேதனப் பசளை உற்பத்திக்குத் தேவையான இயற்கை மூலப்பொருள்கள் வன்னியில் தாராளமாக உள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

நெல் உற்பத்திக்கு அவசியமான யூரியா உரப்பசளை இன்னும் மூன்று வாரங்களில் வந்தடையும் என அரசாங்கம் அறிவித் துள்ளது. இந்திய கடன் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் யூரியா உரத்தின் முதல் தொகுதியான 40 ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா உரம் கிடைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இதேவேளை, வன்னிப் பகுதிகளில் யூரியா உரப்பசளை 42 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் இந்த விலைக்கு வாங்கி எவ்வாறு விவசாயம் செய்வது எனவும் வன்னி விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர். இந்த யூரியா பசளை எங்கிருந்து வந்தது என்பதும் மர்மமானதாகவே உள்ளது.

தடைகளும், தட்டுப்பாடுகளும் காணப் படும் நிலையில் சட்டவிரோதமான நட வடிக்கைகளும் பதுக்கல்களும் கூட மக்களை பெரிதும் பாதிப்படையச் செய்கின்றன.

விவசாயிகளுக்கு உடனடியாகவும், குறைந்த விலையிலும் உரத்தை வழங்கு வதற்கு நடவடிக்கை எடுத்தால் மக்களை பட்டினியில் இருந்து காப்பாற்ற முடியும் எனவும், தமிழ் பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் பயிர்செய்கைகளை செய்வ தற்கு மிக ஆர்வத்துடன் இருக்கின்றனர் எனவும், ஆனால் 40 ஆயிரம் ரூபாவிற்கு அவர்கள் உரத்தை வாங்க வேண்டி யுள்ளது என்றும் தமிழ் தேசிய கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் நாடாளுமன்றத்தில் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இதற்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பதிலளிக்கையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி காலகட்டத்தில் விவசாய உற்பத்தியில் வடக்கு மாகாண மக்கள் முன்னுதாரண மாக உள்ளனர். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் அதிகளவான விவசாய நிலங்களில் விவசாய செய்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

அவ்வாறெனின், அந்த செயற்பாட்டை ஊக்குவிக்க வடக்கு விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். வடக்கின் உற்பத்தி முழு நாட்டுமக்களின் பட்டினி நிலைமையையும் தவிர்க்க நிவாரணமாக அமையும்.




விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# கோட்டாபய பதவி விலகினால் மட்டுமே சர்வதேச உதவிகள் கிடைக்கும்

**- விகிர்தன் -**

மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை சர்வதேசத் திடமிருந்து பாரிய நிதியுதவிகளை மட்டுமே நாடியிருக்கின்றது. தற்போது கிடைத்துக் கொண்டிருக்கும் உதவிகள் 'யானைப் பசிக்கு சோளப்பொரி' போன்றே உள்ளன.

இந்த நிலையில் பாரிய நிதியுதவியை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தே இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. அந்த நிதியுதவி எப்போது கிடைக்கும் என்பது தொடர்பில் எவ்வித உறுதிப்பாடும் இதுவரை எட்டப்படவில்லை.

முதலில் சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் விடயங்களை இலங்கை நிறைவேற்ற வேண்டும். வெறும் வாய் மொழியில் இல்லாமல் உடன்படிக்கையாக அவை கையெழுத்தாக வேண்டும். அதற்கு முன்னதாக இலங்கை அரசியலில் ஸ்திரத் தன்மை ஏற்பட வேண்டும். இவை உடனடியாக நடைபெறுவதற்கான நிலை இன்னமும் உருவாகவில்லை என்றே தெரிகின்றது.

வழங்கப்படும் கடன் தொகை குறித்தோ, அது வழங்கப்படும் நாள் குறித்தோ அறிவிக்க முடியாத நிலையில் உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித் துள்ளது. இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் 20ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. அதிகாரிகள் மட்டத்தில் சந்திப் பொன்றை நடத்துவதற்காகவும், ஏற்கனவே தொழிநுட்ப மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுக்களுக்கு மேலதிகமாக வேலைத் திட்டங்கள் மற்றும் கொள்கைமட்டத் திலான கலந்துரையாடல்கள் முன்னெடுக் கப்படவிருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அதிகாரிகள் மூலமாக முன்வைக்கப்படும் கொள்கை மட்டத்திலான- அர்ப்பணிப்புத் தன்மைக்கு அமையவே பணியாளர் மட்டத்திலான உடன்படிக்கையின் கால எல்லை குறித்து தீர்மானிக்கப்படும் என்றும், இலங்கை அரசாங்கத்திடமிருந்து போதியளவிலான உறுதிமொழிகள் அவசியம் என்றும், உலக உணவு நெருக்கடி மற்றும் வலுசக்தி நெருக்கடி நிலைமைகள் காரணமாக இலங்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் குறித்து தாங்கள் கவனம் செலுத்தி வருவதாகவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவிக்கின்றது.

அதேவேளை, இவ்வாறான நெருக்கடி நிலைமைகளின் போதும் தங்களால் செய்ய முடிந்த நிதி உதவிகள் மற்றும் உடன்படிக்கைகள் குறித்த கால எல்லை தொடர்பில் அறிவிக்க முடியாது எனவும் சர்வதேச நாணய நிதியம் அழுத்தமாகத் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் 189 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. அதன் பிரதான தலைமையகம் வொஷிங்டனில் அமைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் எந்த ஒரு முடிவும் 85 வீதம் அதன் செயலாக்கக் குழுவின் ஆதரவுடன் தான் அமுல் செய்யப்படுதாகக் கூறப்பட் டாலும், அதனைக் கட்டுப்படுத்தும் 18 வீத அதிகாரத்தை ஐக்கிய அமெரிக்கா கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படு கின்றது. இந்த வேளையில், அண்மைய நாட்களாக அமெரிக்கா வெளிப்படுத்தி வரும் கருத்துக்களையும் கூர்மையாக அவதானிக்க வேண்டியுள்ளது.



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இலங்கையின் அரசியல் கட்சிகளையும் முக்கியஸ்தர்களை தொடர்ந்து சந்தித்துக் கலந்துரையாடல் களை மேற்கொண்டு வருகின்றார். தொடர்ந்து பல்வேறு கருத்துக்களையும் அவர் தெரிவித்து வருகின்றார்.

எம்.சி.சி எனப்படும் Millennium Challenge Corporation உடன்படிக்கை மூலமாக 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக இலங்கைக்கு கிடைத்திருக்கும் எனவும், இது கிடைத் திருந்தால் இன்று நாட்டு மக்களுக்குப் பயனுள்ளதாக அமைந்திருக்கும் எனவும் தெரிவித்துள்ள அமெரிக்கத் தூதுவர் பொய்யான செய்திகளைப் பரப்பி மக்களை குழப்பியதன் மூலமாக இன்று நல்ல வாய்ப்புகளை இலங்கை இழந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். இனிமேல் இலங்கையில் இது முன்னெடுக்கப் போவதில்லை என்றும் அதனை வேறு ஒரு நாட்டிற்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மிகவும் சிக்கலான பொருளாதார நிலை யில் இலங்கை சர்வதேச கருத்துக் களுக்கு இணங்காமல் தொடர்ந்து கடும் நிலைப்பாட்டை வெளிப்படுத்துமானால் இத்தருணத்தில் கிடைக்கவிருக்கும் உதவிகளும் கிடைக்காமல் போகலாம் என்கின்ற அர்த்தத்திலேயே அமெரிக்கத் தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளதாகத் தோன்றுகின்றது

இரு நாடுகளுக்கும் இடையில் வேறு புதிய உடன்படிக்கைகள் எதுவும் இப்போது வரையில் செய்து கொள்ளப்பட வில்லை. எனினும் எதிர்காலத்தில் புதிய உடன்படிக்கைகள் செய்துகொள்ள முடியும். அமெரிக்க நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளை செய்ய ஆர்வமாக உள்ளனர். அதற்கு முன்னர் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு அமையும் பட்சத்தில் அமெரிக்காவின் உதவி மட்டுமல்ல பல்வேறு நிறுவனங் களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் என்பவற்றை இலங்கை இழுத்தடித்து வந்துள்ள நிலையில், கோட்டாபய அரசாங்கம் அதனை முற்றாகக் கைவிட்டுள்ளதாகவே தெரிகின்றது. இந்த வேளையில் இவற்றை சரியாக இலங்கை அரசாங்கம் கையாள வேண்டும் என்றும் அமெரிக்கத் தூதுவர் கூறுகின்றார்.

பொறுப்புக் கூறல் உள்ளிட்ட சகல இன, மத மக்களின் உரிமைகளையும் பாது காக்காது விட்டால் இலங்கை ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல முடியாது என்று அமெரிக்க தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"பொதுமக்களின் அமைதியான போராட்டங் களை குழப்பும் வன்முறைகளை வன்மையாக கண்டிக்கின்றோம். மாற்றம் ஒன்று வேண்டும் என மக்கள் வலியுறுத்துகின்றனர். அதனை கருத்தில் கொள்ள வேண்டும். மக்கள் நிலையான, ஜனநாயக நாடொன்றை கட்டியெழுப்ப வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அவ்வாறான ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாக உள்ளது. இந்தப் பொதுவான நோக்கத் திற்காக சகலரும் செயற்பட வேண்டும். நாடாக ஐக்கியப்படவும், சரியான பாதையில் பயணிக்கவும் இதுவே சரியான தருணம்" என அமெரிக்கத் தூதுவர் அழுத்தமாகத் தெரிவித்துள்ளார்.

இன்று சர்வதேச நாணய நிதியம் மட்டு மன்றி, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், அமைப்புக்கள் அனைத்தினதும் கருத்து- எதிர்பார்ப்பு என்பன இவ்வாறே அமைந்துள்ளன. இன்று மக்களால்



வெறுக்கப்படும் அரசாங்கம் முற்றாக வெளியேற வேண்டும். புதிய அரசாங்கம் ஒன்று அமைய வேண்டும் என்பதே சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு. குறிப்பாக சொல்ல வேண்டுமானால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ பதவி விலக வேண்டும் என்பதே அனைத்து தரப்பினரதும் எண்ணம்.

அது நடந்தால் இலங்கைக்கு கிடைக்கப் பெறும் சர்வதேச உதவிகளில் உடனடி முன்னேற்றம் ஏற்படலாம். அதுமட்டுமன்றி நாட்டில் சர்வதேச நாடுகளின் முதலீடுகள் வரலாம். நாட்டில் போராட்டங்கள், வன் முறைகள் இல்லாமல் போகும் போது சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும் அதிகரிக்கலாம்.

ஆனால், பதவி விலகுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ இணங்குவதாக இல்லை. இன்னும் இரண்டு வருடங்கள் ஜனாதிபதியாக இருந்து விட்டே செல்வேன் என அவர் உறுதியாகக் கூறுகின்றார். தோல்வியடைந்த ஜனாதிபதியாகத் தான் இடையில் விலகிச் செல்ல முடியாது என்பது அவரது வாதமாகவுள்ளது. அவரது இந்த வரட்டுக் கௌரவம் நாட்டு மக்களை மேலும் துயர நிலைக்கே இட்டுச் செல்லும் என்பதை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி கோட்டாபயவிற்கு எதிரான காலிமுகத்திடல் போராட்டம் தற்போது சத்தமின்றி அடங்கிப் போய் விட்டதாகவே தோன்றுகின்றது.

கோட்டாபய ராஜபக்ஸ பதவி விலகி, நாட்டில் ஒரு புதிய சூழல் உருவாக வேண்டுமானால் தேர்தல் ஒன்றிற்கு செல்வதுதான் ஒரே வழி. தேர்தலில் மக்கள் தீர்ப்பளிப்பர். ஒரு தேர்தலுக்காக மக்கள் தொடர் போராடங்களை மேற்கொள்ள வேண்டிய காலகட்டம் இது.


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels• We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# நானிலம் போற்றும் நட்பு - 1



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!

"நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்புடன் புதிய தொடர்கட்டுரை வாயிலாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி. ஒரு தனி மனிதனின் வாழ்க்கையில் நட்பு என்பது முக்கிய பங்கை வகிக்கின்றது. ஆகவே நட்பு என்ற தலைப்பில் உரையாடிக் கொள்வது பயனுள்ளதாக அமையும் என்ற நோக்கில் இத்தலைப்பில் உங்களுடன் உரையாட முன்வந்துள்ளேன். இந்தத் தொடர்கட்டுரையைப் பிரசுரிக்கும் விளம்பரம் பத்திரிகை நிறுவனத்தினருக்கு மிகவும் நன்றி. வாசகப் பெருமக்களுக்கும் நன்றி. "நினைவாற்றல்", "வெகுளாமை", "அன்புடைமை", "காலத்தோடு வளரும் கணினிகள்", "இன்னல் தீர்க்கும் இயற்கை" ஆகிய ஆறு தொடர் கட்டுரைகள் மூலமாகவும், ஒரு தொடர் கதை மூலமாகவும் விளம்பரம் பத்திரிகையின் வாசகர்களாகிய உங்களுடன் பயணித்த நான் இன்று முதல் "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் பயணிக்க விழைகின்றேன். கடந்த இதழில் நிறைவுக்கு வந்த "இன்னல் தீர்க்கும் இயற்கை" தவிர்ந்த அனைத்தும் நூலுருவம் பெற்றுள்ளன என்பது மன நிறைவைத் தருகின்றது. இந்நூற்களில் அநேகமானவற்றின் பிரதிகளை விளம்பரம் பத்திரிகை அலுவலகத்திலும் அல்லது என்னிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். சிலவற்றிற்கான இரண்டாம் பதிப்புகளைச் செய்ய வேண்டியுள்ளது. அதற்காகக் காத்திருங்கள்!.

உலகத்திலே உன்னதமான உறவு நட்பு (Friendship) ஆகும். நட்பு என்பதை தோழமை அல்லது சினேகம் என்றும் குறிப்பிடலாம். நட்பு என்பது இருவரிடையே அல்லது பலரிடையே ஏற்படும் ஓர் அற்புதமான உறவாகும். நட்பு என்பது வயது, மொழி, இனம், நாடு என எந்த வேறுபாடுமற்று இருவருக்கிடை யில் அல்லது பலருக்கிடையில் உள்ள உறவுமுறை ஆகும். எந்நிலையிலும் கைகொடுக்கும் உறவுமுறையாக நட்பு விளங்குகிறது.

முதல் உலக நட்பு தினம் 1958ஆம் ஆண்டு ஜூலை 30ஆம் திகதி வட அமெரிக்க மாநிலமான "பராகுவே" இல் உலக நட்பு குருசேட் என்ற சர்வதேச சிவில் அமைப்பால் கொண்டாடப்பட்டது. "நட்பின் மூலம் மனித உணர்வினைப் பகிர்தல்" என்பது உலக நட்பு தினத்தின் கருப்பொருள். உலக மக்கள் செழிப்பாகவும், அமைதியாகவும் இருக்க நட்பு ஓர் அடிப்படைக் கருவியாகும். இது சமூக நல்லிணக்கத்தையும் சமூகங்களுக்கிடையில் சாந்தத்தையும் பேணுவதற்கான முக்கிய ஆதாரமாகவும் உள்ளது. மக்கள், சமூகங்கள் மற்றும் நாடுகளிடையே நட்பின் போக்குகளை வளர்ப்பதன் மூலம் நாம் ஒரு சிறந்த நிலைத்தன்மை, ஒற்றுமை மற்றும் அமைதியை அடைய



முடியும் என்று கூறப்படுகிறது.

2011ஆம் ஆண்டு ஐநா பொதுச்சபை ஜூலை 30ஐ உத்தியோகபூர்வ சர்வதேச நட்பு தினமாக அறிவித்தது. நட்பு என்பது மக்கள், நாடுகள், கலாச்சாரங்கள் மற்றும் தனிநபர்களிடையே அமைதி முயற்சிகளை ஊக்குவிக்கும் மற்றும் சமூகங்களை இணைக்க முடியும் என்று ஐ.நா முன்மொழிந்தது.
ஆனாலும் உலக நட்புதினம், தேசிய நட்பு தினம் எனப் பல பெயர்களில் பல நாடுகளிலும் வெவ்வேறு நாட்களில் நட்புதினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. எடுத்துக் காட்டாக இந்தியாவில் தேசிய நட்பு தினம் ஒகஸ்ற் மாதத்தில் வரும் முதல் ஞாயிற்றுக்கிழமையில் கொண்டாடப் படுகிறது. அமெரிக்காவில் தேசிய நட்பு தினம் பெப்ரவரி 15ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

இருவருக்கிடையில் அல்லது பலருக்கிடையில் ஏற்படக்கூடிய நட்பு இரு குழுக்களிடையே அல்லது பல குழுக்களுக் கிடையே ஏற்படக்கூடிய நட்பு, இரண்டு சமூகங்களுக்கிடையே அல்லது பல சமூகங்களுக்கிடையே ஏற்படக்கூடிய நட்பு, இரண்டு நாடுகளுக்கிடையே அல்லது பல நாடுகளுக்கிடையே ஏற்படக்கூடிய நட்பு என்று பல வடிவங்களில் நட்பு நிலவுகிறது எனலாம்.

சங்ககாலத்தில் இருந்து இன்றுவரை நண்பர்கள் சிறந்த ஆலோசகர்களாகவும் விளங்குகின்றனர். ஒருவருடைய சிந்தனைகளைச் செயற்படுத்துவதிலும் நண்பர்கள் முக்கிய பங்கை வகிக்கின்றனர்.

திருவள்ளுவர் திருக்குறளில் ஐந்து அதிகாரங்களில் மொத்தம் 50 குறட்களில் நட்பு பற்றி எடுத்துரைக்கின்றார். இதற்கு மேலாக மேலும் பல குறள்களில் நட்பு பற்றிய கருத்துகள் உள்ளன. அதிகாரம் 79 நட்பு அதிகாரத்தில்
"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு" என்கிறது குறள் 781. இதற்கான உரை "நட்பைப்போல் செய்து கொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன, அதுபோல் தொழிலுக்கு அரிய காவலாக இருப்பவை எவை உள்ளன" என்று மு.வரதராசனார் உரை கூறுகின்றார்.

"நட்பின் செயற்கு அரிய யா உள? நட்புப்போலச்செய்துகோடற்கு அரிய பொருள்கள் யாவை உள்ளன? அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள? செய்து கொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கரிய காவலாவன யாவை உள?" என்று உரை கண்டுள்ளார் பரிமேலழகர். "நட்புக் கொள்வது போன்ற அரிய செயல் இல்லை. அதுபோல் பாதுகாப்புக்கு ஏற்ற செயலும் வேறொன்றில்லை" என்று உரை கண்டுள்ளார் டாக்டர் கலைஞர். "நட்பைப் போல்செய்து கொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன, அதுபோல் தொழிலுக்கு அரிய காவலாக இருப்பவை எவை உள்ளன?" என்று உரை கண்டுள்ளார் வித்துவான், டாக்டர் எம். நாராயண வேலுப்பிள்ளை. "நட்பைப் போல் சிறந்தது வேறு ஒன்றும் இல்லை" என்று சாமி சிதம்பரனார் உரை கண்டுள்ளார். "நட்புப்போல் உண்டாக்குதற்கு அரியவான பொருள்கள் யாவையுள? அவ்வாறு உண்டாக்கப்பட்ட நட்புப் போல், பிறர் நல்வினை செய்தற்கு அரியவாகக் காக்கும் காவல்கள் யாவையுள்?" என்று உரை கண்டுள்ளார் மணக்குடவர். நட்பின் சிறப்பினை இந்தக் குறள் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

குடும்ப உறவுகளில் முக்கிய பங்கேற்கும் பெற்றோர்கள், மனைவியைவிட நமது துக்கத்திலும், மகிழ்ச்சியிலும் பங்கு கொள்வதில் நண்பர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்பதில் ஐயமில்லை. தாயிடமும், மனைவியிடமும், தந்தையிடம் கூட ஆலோசனை செய்ய முடியாத பல விடயங்களை நண்பர்களுடன் கலந்துரையாடி சரியான தீர்வைக் காணும் நிலையை பொதுவாக அவதானிக்க முடிகிறது.

ஆனால் நட்பு என்று கூறுகின்றபொழுது நட்பினை நண்பரிடையே மட்டுமே காணலாம் என்றும் கூறமுடியாது. கணவன் மனைவிக்கிடையே நல்ல நட்பு உள்ளது என்று கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். தாய் மகளுடன் நல்ல நட்பைப் பேணினாள் என்று கூறுவதையும் கேள்விப்பட்டிருக்கின்றோம். எனவே பொதுவாக நட்பு என்பது நண்பர்களுக்கிடையே உள்ள உறவைச் சுட்டி நின்றாலும் ஏனைய உறவுகளிலும் காணப் படக்கூடிய தன்மையாக விரிவடைந்துள்ளது எனறே கூறவேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் பிறருடன் மேற்கொள்ளப்படும் நட்பைப் போலவே குடும்ப அங்கத்தவர்களிடையே நட்பார்த்தமான உறவுகள் ஏற்படுவதுண்டு.

உலகில் உண்மையான நட்புக்கு ஈடாக எதுவும் கிடையாது என்பது பொதுவான எண்ணமாகும். நண்பர்கள் தமக்குள் பகிர்ந்து கொள்ளும்போது மனதில் ஏற்படும் அமைதியை அளவிட முடியாது. ஒருவர் தனது மனதிற்குள் கவலைகளை அடக்கி வைத்திருக்கும்பொழுது அதனால் உள ஆரோக்கியத்தில் பாரிய பாதிப்புகள் ஏற்படுகின்றன.

உண்மையான நட்புத்தன்மையுடன் தம்மிடையே பகிர்ந்து கொள்கையில் அல்லது அவர்கள் மூலம் ஆலோசனைகளைப் பெறுகின்ற பொழுது வாழ்க்கையில் பெரும் வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியும்.

சாதி, இனம், மொழி, பால் பாகுபாடு இன்றி அன்பின் ஊற்றிடமாக நட்பு இருக்கும்பொழுது அந்த உறவு ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு ஏணிபோன்று அமைந்து விடுகின்றது.

தூய நட்பினைப் போற்றி சுயநலமற்ற நண்பர்களாக மனிதர் வாழ்வார்களேயானால் சமூக வளர்ச்சியும் மேம்படும். உலகில் அமைதியும், சமாதானமும் ஏற்படும்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

**ஆழமான அன்புக்கும் உண்மையான நட்புக்கும் மதிப்பு கொடுக்காதவர்களை தூக்கி எறியவும் தயங்காதே...!**

தந்தைக்கு நிகர் யாருமில்லை
தந்தையை விட்டால் பேருமில்லை
தந்தையின் நெஞ்சில் வஞ்சமில்லை
தந்தை இருந்தால் பஞ்சமில்லை
தந்தையின் சொல் மிக்க மந்திரமில்லை
தந்தையின் அன்பில் தந்திரமில்லை
தந்தைக்கு ஒரு தாலாட்டுமில்லை
தந்தைக்கு ஒரு பாராட்டுமில்லை
தந்தையின் கண்ணீரைக் கண்டதில்லை
தந்தையின் வேர்வையை அறிந்ததில்லை
தந்தையை யாரும் வாசிக்கவில்லை
தந்தையைப் போல் ஓர் ஆசானுமில்லை
தந்தையை மிஞ்சிய அரசனுமில்லை
தந்தைக்கு யாருமிங்கே நிகரில்லை
தந்தையைப் போல் அந்தக் கடவுளுமில்லை



# மீண்டும்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி



லிபரல் கட்சி இரண்டாவது இடத்தில் இருந்தாலும், அது தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்குகளில் மூன்றாவது இடத்தில் இருக்கும் புதிய ஜனநாயகக்கட்சி பெற்ற ஆசனங்களை விட 23 ஆசனங்கள் குறைவாகவே பெற்றது பல கருத்துக் கணிப்பாளர்களின் எதிர்வு கூறலை தவறாக்கியுள்ளது.




பசுமைக்கட்சிக்கு இம்முறை விழுந்த வாக்குகளின் எண்ணிக்கை கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது 15,000 மட்டில் அதிகமாக இருந்ததுடன், அது கடந்த தேர்தலில் பெற்ற சதவீத வாக்குகளைவிட 1.4% அதிகமாக இருந்தாலும் அது பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

இம்முறை நடைபெற்ற ஒன்றாறியோ சட்ட சபைக்கான பொதுத்தேர்தல் ஒரு சுயேட்சை வேட்பாளரையும் சட்டசபைக்கு அனுப்புகிறது. அவர் Haldimand-Norfolk தொகுதியில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்ட அத்தொகுதியின் பழமைவாதக்கட்சியின் முன்னாள் அமைப்பாளர் ஆவார். இத்தொகுதியை 23 வருடங்களாகப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்த பழமைவாதக்கட்சியின் சட்டசபை உறுப்பினர் இளைப்பாறியதைத் தொடர்ந்து இவருக்கு அக்கட்சியின் சார்பில் போட்டியிட அனுமதி கிடைக்காததால், சுயேட்சையாகப் போட்டி போட்டு Bobbi Ann Brady ஒன்றாறியோ மாகாண சட்டசபை உறுப்பினராகத் தெரிவானார்.

இம்முறை நடைபெற்ற ஒன்றாறியோ மாகாண சட்டசபைத் தேர்தலில் முதல் தடவையாகப் போட்டி போட்ட புதிய நீலக்கட்சியும், ஒன்றாறியோக் கட்சியும் முறையே 127,180உம் 84,251 மொத்த வாக்குகளைப் பெற்று மாகாணம் தழுவிய கட்சிகள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையில் 5ஆம், 6ஆம் இடங்களைப் பெற்றிருந்தாலும் அவர்களுக்கு ஓர் ஆசனம் கூடக் கிடைக்கவில்லை.

இம்முறை நடைபெற்ற மாகாண சட்ட சபைத் தேர்தலில் போட்டியிட்ட தமிழர் ஐவரில் ஏற்கனவே பழமைவாதக்கட்சியின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த லோகன் கணபதியும், விஜய் தணிகாசலமும் மீண்டும் தெரிவாகியுள்ளனர்.

## Markham - Thornhill தொகுதியின் தேர்தல் முடிவுகள்

| கட்சி | வேட்பாளர் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|---|
| பழமைவாதக்கட்சி | Logan Kanapathi | 14,011 | 48.8 |
| லிபரல் கட்சி | Sandra Tam | 10,763 | 37.5 |
| புதிய ஜனநாயகக்கட்சி | Matthew Henriques | 2,597 | 9.0 |
| பசுமைக்கட்சி | Zane Abulail | 735 | 2.6 |
| புதிய நீலக்கட்சி | Jennifer Gleason | 376 | 1.3 |
| ஒன்றாறியோ மத்தியகட்சி | Mansoor Qureshi | 219 | 0.8 |



இத்தொகுதியில் லோகன் கணபதி 3,248 (11.3%) அதிகப்படியான வாக்குகளால் வென்றார்.

## Scarborough North தொகுதியின் தேர்தல் முடிவுகள்

| கட்சி | வேட்பாளர் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|---|
| பழமைவாதக்கட்சி | Raymond Cho | 12, 646 | 48.5 |
| லிபரல் கட்சி | Anita Anandarajan | 7,750 | 29.7 |
| புதிய ஜனநாயகக்கட்சி | Justin Kong | 4,740 | 18.2 |
| பசுமைக்கட்சி | Tara McMahon | 479 | 1.8 |
| புதிய நீலக்கட்சி | James Bountrogiannis | 277 | 1.1 |
| ஒன்றாறியோ கட்சி | Pete Grusys | 105 | 0.4 |
| மேற்கூறிய எவருமில்லாத ஜனநாயகக்கட்சி | Mark Dickson | 100 | 0.4 |

இத்தொகுதியில் அனிதா ஆனந்தராஜன் 4,896 (18.8%) வாக்குகளால் பழமைவாதக் கட்சி அமைச்சரான Raymond Choஇற்கு அடுத்தபடியாக 2ஆம் இடத்திற்கு வந்தது குறிப்பிடத்தக்கது.



## Scarborough - Rouge Park தொகுதியின் தேர்தல் முடிவுகள்

| கட்சி | வேட்பாளர் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|---|
| பழமைவாதக்கட்சி | Vijay Thanigasalam | 15,732 | 45.5 |
| லிபரல் கட்சி | Manal Abdullahi | 9,522 | 27.5 |
| புதிய ஜனநாயகக்கட்சி | Felicia Samuel | 7,576 | 21.9 |
| பசுமைக்கட்சி | Priyan De Silva | 835 | 2.4 |
| ஒன்றாறியோ கட்சி | Gorden Kerr | 521 | 1.5 |
| புதிய நீலக்கட்சி | Christopher Bressi | 283 | 0.8 |
| ஒன்றாறியோவின் சுதந்திரக்கட்சி | Matthew Oliver | 133 | 0.4 |



இத்தொகுதியில் விஜய் தணிகாசலம் 6,201 (18%) அதிகப்படியான வாக்குகளால் வென்றார்.

புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் இத்தேர்தலில் போட்டியிட்ட மற்றைய இரு தமிழர்களான நீதன் சண் Scarborough Centre தொகுதியில் 8,344 (26.2%) வாக்குகளையும், செந்தில் மகாலிங்கம் Markham - Unionville தொகுதியில் 2,579 (7.2%) வாக்குகளையும் பெற்று மூன்றாம் இடத்திற்கு வந்தனர்.

தேர்தல் முடிவுகள் வெளியானவுடன் கடந்த நான்கு தேர்தல்களிலும் புதிய ஜனநாயகக் கட்சியைத் தலைமை தாங்கி வழிநடத்திய அதன் தலைவர் Andrea Howath தனது கட்சித்தலைமைப்பதவியை இராஜினாமா செய்தார். அவரைத் தொடர்ந்து அடுத்தநாள் அவரிற்குத் தலைமைப் பணியாளராக (Chief of Staff) பதவி வகித்த Michael Balagusஉம் கட்சித்தலைவருக்கு உரிய தலைமைப் பணியாளர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். Andrea Howath ஒன்றாறியோ மாகாண புதிய ஜனநாயகக்கட்சியின் தலைவராக 2009 மார்ச் 7இல் இருந்து பதவி வகித்து வந்துள்ளார்.



2020 மார்ச் 7ஆம் திகதியில் இருந்து லிபரல் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று அக்கட்சியை வழிநடத்தி வந்த Steven Del Ducaஉம் தேர்தல் முடிவுகள் வெளியானவுடன் தனது கட்சித்தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்தார். Steven Del Duca போட்டியிட்ட Vaughan - Woodbridge தொகுதியிலேயே பழமைவாதக் கட்சியின் அமைச்சரான Michael Tibollo இடம் 6,725 (18.7%)


(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)




# தமிழகத்தில் பிற மொழியினர்!

## நூல் விமர்சனம்: தளவாய் சுந்தரம்

தமிழகத்தில் இந்தி, வங்காளம், ஒரியா மொழி பேசும் வட இந்திய மாநிலங்களைச் சேர்ந்தோர் குடியேறுவது, 2008 _ 2018ஆன 10 ஆண்டுகளில் 32 சதவீதம் அதிகரித்துள்ளது என்கிறது ஓர் ஆய்வு. அதன் பின்னரான கடந்த 4 ஆண்டுகளில் இந்தக் குடியேற்றம் அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை. அதேநேரம் தமிழர்கள் வட இந்திய மாநிலங்களில் குடியேறுவது கணிசமாகக் குறைந்துள்ளது.





பத்தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப் படும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை ஆதாரமாக கொண்டுள்ள மேற்குறிப்பிட்ட ஆய்வு பின்வரும் விவரங்களை சுட்டிக் காட்டுகிறது, தமிழர் வட மாநிலங்களில் குடியேறுவது 2001ஆம் ஆண்டில் 8.2 லட்சமாக இருந்தது, 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 7.8 லட்சமாக குறைந்துள்ளது. இதே காலகட்டத்தில் உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற வட மாநிலங்களில் இருந்தும், அசாம் போன்ற வட கிழக்கு மாநிலங்களிலும் இருந்தும் ஏராளமானோர் தமிழகத்தில் குடியேறி யுள்ளனர். தமிழகம், கேரளா போன்ற தென்னிந்திய மாநிலங்களில் குடியேறும் வட இந்தியர்களின் எண்ணிக்கை 2001ஆம் ஆண்டு 58.2 லட்சமாக இருந்தது, 2011-ஆம் ஆண்டில் 77.5 லட்சமாக உயர்ந்துள்ளது. அதாவது வட இந்தியர் தமிழகம், கேரளா உள்ளிட்ட தென் மாநிலங்களில் குடியேறுவது ஏற்கெனவே அதிகமாக இருந்த நிலையில், தற்போது அதிலும் அதிகமாக 33.2 சதவீதம் உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் நிலவும் அமைதியான சூழல், வேலைவாய்ப்பு, பொருளாதார வசதி போன்ற காரணங்கள் இவர்கள் தமிழகத்தில் குடியேறிய காரணம் என்று இந்த ஆய்வு தெரிவிக்கிறது. இதற்காக தமிழர் பெருமைப்பட்டுக் கொள்ளலாம் ஆனால், எதிர்காலத்தில் தமிழருக்கு மிகப்பெரிய சிக்கலை உருவாக்கும் அபாயம் இதனுள் பொதிந்திருப்பதை மறுக்க முடியாது.

அது என்னவிதமான அபாயம், இந்த சூழலை எப்படி எதிர்கொள்வது என்பதற்கு இன்றைய தமிழகத் தமிழருக்கு வழி காட்டியாக அமையக்கூடிய நூல்களில் ஒன்று, 'தமிழகத்தில் பிற மொழியினர்.' இந்நூல் ஆசிரியர் ம.பொ. சிவஞானம், தமிழறிஞர். தனது நயமான உரை மூலம் சிலப்பதிகாரப் பெருமையினை தமிழுலகம் அறியச் செய்து, அதனாலேயே 'சிலம்பு செல்வர்' என சிறப்புப் பெயர் பெற்றவர். 1946இல் 'தமிழரசுக் கழகம்' என்ற அமைப்பை நிறுவி, அதன் வாயிலாக, மொழியின் அடிப்படையில் தமிழகம் தனி மாநிலமாக வேண்டும் என்ற கோரிக்கையை முதன்முதலில் எழுப்பியவர். அப்போது தென் இந்திய மாநிலங்கள் இணைந்து சென்னை மாகாணமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் பிற மொழியினர் என்னும் இந்த நூலில் பல நூறு ஆண்டுகால வரலாற்றைப் புள்ளிவிவரமாக சொல்லப் பட்டுள்ளது. வரலாறு நெடுகவே தமிழகம் திறமைகளைப் பாராட்டத் தெரிந்த மக்கள் நிறைந்த பகுதியாகத்தான் இருந்திருக் கிறது. அரசியல், இலக்கியம், கலை என எந்தத் துறையாக இருந்தாலும் திறமை களை ஏற்றுக்கொள்ளும், ஊக்குவிக்கும் மனப்பாக்கு உடையவர்களாகத்தான் தமிழர் இருந்தனர். அதேநேரம் தமிழகத் துக்குப் பக்கத்து மாநிலங்களில் இந்நிலை இல்லை என்பதும் தமிழர்களே அங்கெல் லாம் பாதிப்புக்கு உள்ளானார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனாலும், தமிழர் தடம்புரளவில்லை. சமீபகால அரசியல், சினிமா வரலாறுகளே இதற்கு சாட்சி.



இந்நிலையில், தமிழர் மீது பிற மொழிக் காரர்கள் ஆதிக்கம் செலுத்த முயற்சித்த போதுதான், அதன் ஆபத்தை உணர்ந்து இந்நூலை எழுதியுள்ளார், ம.பொ.சி. குறிப்பாக அரசு வேலை வாய்ப்புகளில் தமிழர் புறக்கணிக்கப்பட்டது ம.பொ.சி. மனதில் காயங்களை ஏற்படுத்தியுள்ளது. அதனால், தமிழினம் ஒன்றுபட வேண்டும், விழிப்புணர்வு அடைய வேண்டும் என்ற அவரது ஆர்வத்துடிப்பை நூல் முழுவதும் உணர முடிகிறது.

"இந்நூல் இனவெறியை வளர்க்க எழுதப் பட்டதல்ல. இனவழி உரிமைகளை வலியுறுத்தி, ஒருமைப்பாட்டை வளர்க்கும் குறிக்கோளுடன் எழுதப்பட்டது" எனக் கூறும் ம.பொ.சி. தேசிய பாரம்பரியத்தைச் சேர்ந்தவர் என்பது நாடறிந்த உண்மை. ஆகவே, இந்தியாவின் பிற மொழியினர் மீது அவர் காழ்ப்புக்கொள்ள சந்தர்ப்பமே இல்லை. ஆயினும், பிற மாநிலங்களில் இனவுணர்வும் தேசிய உணர்வுடன் இணைந்து செயல்படுவதை எடுத்துக் காட்ட தேசியவாதிகளிடம் காணப்படும் இனவிரோதப் போக்கையும் தயவு தாட்சண்யமின்றி இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

அக்காலகட்டத்தில் சென்னை நகரில் பிறமொழியினரின் வாழ்வு பற்றியும், எங்கும் எதிலும் தமிழரல்லாதோரின் தலை யீடு பற்றியும், தமிழனத்துக்கு விபத்து ஏற்பட்டுவிடக்கூடாது என்ற விழிப்புணர்வுச் சிந்தனை பற்றியும், ஏன் தமிழினம் ஒன்றுபட வேண்டும் என்ற கோட்பாடு பற்றியும் இந்நூல் விரிவாக பேசுகிறது.

இந்நூல் அக்கால நாட்டு நிலைமையை எளிதாகப் புரியவைப்பதுடன் எதிர் காலத்தில் தமிழகம் எடுக்கவேண்டிய நிலைப்பாடுகள் குறித்தும், இன்றைய சிக்கலைப் புரிந்துகொள்வதற்கும் வழி காட்சியாக அமைகிறது.

தமிழகத்தில் பிற மொழியினர்
ஆசிரியர்: ம.பொ. சிவஞானம்
பக். 266, விலை ரூ. 175
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41பீ சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை _ 98
போன்: +91 44 2625 8410

## மீண்டும்...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

வாக்குகளால் தோல்வியுற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் புதிய ஜனநாயகக்கட்சி கடந்த முறை வெற்றி பெற்ற இடங்களில் மாற்றம் ஏற்பட்டு




பழமைவாதக்கட்சி உறுப்பினர் தெரிவாகி யிருந்தனர். இதற்கு முக்கிய காரணம் பழமைவாதக்கட்சி அரசின் தொழில் அமைச்சரான Monte McNaughton இனுடைய திறமை என்று கூறப்படுகிறது. இவர் தனது திறமையால் பல காலமாகப் புதிய ஜனநாயகக்கட்சிக்கு ஆதரவு தெரிவித்துவரும் தொழிற்சங்கங்களின் (Union) ஆதரவை பழமைவாதக்கட்சிக்குச் சார்பாகத் திருப்பியிருந்தார்.

டக் ஃபோர்ட்டின் தொழிலாளரின் ஆதரவுப் பேச்சு, வாகன உற்பத்தித் தொழில் மையமான Windsor, Tecumseh, Essex தொகுதிகள், உருக்கு உற்பத்தித் தொழில் மையமான Hamilton Esot - Stoney Creek தொகுதி, சுரங்கத் தொழில் மையமான Timmins தொகுதிகளில் இம்முறை ஒரு போதும் இல்லாதவாறு பழமைவாதக் கட்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது. இதனால் புதிய ஜனநாயகக்கட்சியின் எதிர்காலத்திற்கு சவால் விடப்பட்டுள்ளது என CBC ஊடகம் தெரிவிக்கிறது.


பழமைவாதக்கட்சியின் மற்றொரு அமைச்ச ரான Caroline Mulroneyஉம் தனது நட்சத்திர அந்தஸ்தை உபயோகித்துப் பெரும்பாலான ஒன்றாறியோவாழ் பிரஞ்ச் மக்களின் ஆதரவைப் பழமைவாதக் கட்சிக்குப் பெற்றுக் கொடுத்தார்.

இவற்றிற்கு மேலாக ஒன்றாறியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் கோவிட்-19 தொற்று நோய்ப்பரவலின்போது கனடியப் பிரதமருடன் சேர்ந்து ஒத்துழைத்தது அவரை ஒன்றாறியோ மக்களிடம் செல்வாக்குப் பெற உதவியது எனக் கனடிய முக்கிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடிய மத்திய அரசிற்கான தேர்தலில் லிபரல் கட்சிக்கு ஆதரவு அளித்த ஒன்றாறியோ மாகாண மக்களில் கிட்டத்தட்ட 25%ஆனோர் ஒன்றாறியோ மாகாணத் தேர்தலில் டக் ஃபோர்ட் இற்கும் அவரின் பழமைவாதக்கட்சிக்கும் ஆதரவு அளித்துள்ளனர் எனக் கருத்துக் கணிப்புகளை நடத்தும் Abacus Data மற்றும் Research Co நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் CBC ஊடகத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# பொறாமை தீமைகளின் பிறப்பிடம்



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

பொறாமை என்பது ஒருவரின் வளர்ச்சி, வெற்றி, வசதி ஏதாவது ஒன்றையோ, பலவற்றையோ கண்டு மனதால் தாங்க முடியாமல் பொருமுதல் அல்லது ஆற்றாமை எனப்படும். ஒரு நபர் மற்றவரின் மிகச் சிறந்த நடத்தை, சாதனை, உடைமை ஆகியவற்றை பெறமுடியாமல் போகும்போதும், அதைப் பெற விரும்பும்போதும் அல்லது மற்றவர் அதைப் பெறக்கூடாது என விரும்பும் போதும் நிகழும் ஒருவித உணர்ச்சி. பொறாமை என்பது என்பது, ஒருவர் தான் கொண்டிராத ஒன்றை மற்றொருவர் கொண்டிருப்பதன் விளைவாக ஏற்படும் வலி அல்லது ஏமாற்றமாகும். ஒன்றைக் கட்டுப்படுத்தும் திறனுக்காக மனித உணர்வுகளில் மிகவும் வலிமையானதாக உணரப்படுவதாகும். எமக்கு ஒன்று கிடைக்கவில்லை என்று வருந்துவதைவிட, மற்றவர்க்கும் அது கிடைக்கவில்லை யென்று நாம் சந்தோசம் அடைவதாகும். பொறுத்துக்கொள்ள முடியாமை, மகிழ முடியாத குணம், பொறுக்காமை பொறாமை எனப்படும். பொறாமை என்பது பொறாமைக் குணம் என்றும் அழைக்கப்படுகிறது. “பொறாமையை மற்றவரின் அதிஷ்டத்தால் விளையும் வலி” என அரிஸ்டோட்டில் வரையறுக்கின்றார்.

அவசரமும், விரைவுச் செயற்பாடுகளும் துரத்திக்கொண்டிருக்கும் இயந்திரத்தன மான கடுகதி வாழ்விலேயும், பெரும் பாலானோரிடம் பொறாமையும் குடி கொள்ளத் தவறவில்லை. வாழ்வியல் கோலங்களில் எம்முடன் பொறாமை உணர்வும் கலந்து விட்டன. ஆரம்ப காலங்களில் தேவைகள், ஆசைகள் குறைவாக இருந்தமையால் செயற்பாடு களை சிந்தித்து மேற்கொள்ள முடிந்தது. இதன் விளைவாக பொறாமை தவிர்த்து வாழ முடிந்தது. இது மகிழ்ச்சி, அமைதி, ஆரோக்கியம், நல்லுறவு, சமூகப் பற்று ஆகிய விடயங்களில் தன்னிறைவு கொண்டு வாழ்ந்தனர். ஆனால் இன்றோ பொறாமை உணர்வினால் இவை எல்லா வற்றையும் தொலைத்துவிட்டு வாழ்கிறோம். பொறாமை என்கின்ற பண்பியல்பு எம்மிடையே வலுவடைந்துள்ளது. இதனால் எமது வாழ்வின் வரையறைகள் தடம்மாறி வாழ்வு பலவீனம் அடைந்துள்ளது.

பொறாமை என்பது ஓர் அச்சுறுத்தல். பொறாமை பொதுவாக எதிர்மறையாகப் பார்க்கப்படுகின்றது. இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஆங்கிலம் பேசும் பிற கலாசாரங்களில், பொறாமையானது பெரும் பாலும் பச்சை நிறத்துடன் தொடர்புடைய தாக உள்ளது. பசுமையுடன் பொறாமை பச்சை நிறக் கண்ணுடைய அரக்கர் என்ற சொற்றொடர் பொறாமையால் தூண்டப்பட்டதாகத் தோன்றும் தனிநபரின் தற்போதைய நடவடிக்கைகளைக் குறிக்கிறது. பொறாமை தாழ்வு, தன்மதிப்பு உணர்விலிருந்தும் வரலாம். இது தனி நபரின் சுய உருவத்தை அச்சுறுத்துகிறது. “பொறாமையை நீ வெளியிட்டால் அவை வட்டியும், முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்” என்கிறார் சுவாமி விவேகானந்தர். அடுத்தவனுக்குக் கிடைத்து விட்டதென்று சகமனிதன் பொறாமைப்படாத ஒரே விஷயம் மரணம் மட்டுமே. ஒவ்வொரு அறிவுரைக்குப் பின்னும் ஓர் அர்த்தம் உள்ளது. அது அக்கறை அல்லது பொறாமை ஆகும். ஒருவரின் வளர்ச்சியை மட்டுமல்ல, அழகைக்கண்டும் பொறாமை கொள்வோர் பெரும்பாலும் பெண்களாகவே இருப்பர். மற்றொரு நபர், தான் முக்கியமெனக் கருதுவதை வைத்திருந்தால் பொறாமை கொள்வர். “பொறாமை மகிழ்ச்சியின்மை யின் முக்கிய காரணங்களில் ஒன்று” பெர்ட்ராண்ட் ரூஸ்ஸல் கூறியுள்ளார். இது மனித இயல்பின் உலகளாவிய மற்றும் மிகுந்த துரதிஷ்டவசமான நோக்கா கும். ஏனெனில் பொறாமை படைத்தவர் தனது பொறாமையால் தனக்கு மட்டும் மகிழ்வின்மையை விளைவிப்பதில்லை. அது பிறருக்கும் இடையூறுகளை ஏற்படுத்துகிறது.

எண்ணற்ற ஆண்களும், பெண்களும் கோபத்தினால் தீவிர பொறாமைக்குக் குறைந்த காலத்தில் ஆட்படுகின்றனர். இதனால் இவர்கள் ஆத்திரத்துக்கு உட் பட்டு, வலுச்சண்டைக்கும் ஆட்படுகின் றனர். பொறாமை என்பது கிறிஸ்துவ தேவாலயத்தின் ஏழு கொடும்பாவங்களில் ஒன்றாகும். இஸ்லாமில் பொறாமையானது ஒருவரின் நற்பேறுகளை அழித்துவிடும் எனக் கூறப்பட்டுள்ளது. போட்டி எப்பவுமே பொறாமையாக மாறக்கூடாது. ஆனால் பொறாமைக் குணத்தை போட்டியாக ஏற்றுக்கொள்வதே மனிதருக்கும் அவருடைய மனதிற்கும் சவாலாக அமையக் கூடிய செயல். பொறாமையை அடக்குவது தனிமனித மனோபாவத்தைப் பொறுத்தது. பணம் அதிகம் வைத்திருப் போரைப் பார்த்துப் பொறாமைப்பட்ட காலம் மாறி, ஆரோக்கியமானவர்களைப் பார்த்துத்தான் பொறாமைப்படுகின்றனர். தன்னைவிட வேறு எவரும் உயர்ந்து விடக்கூடாது என்ற தீய எண்ணமே பொறாமை எனும் எதிரியாகும். நமக்குத் தெரியாதது அவனுக்குத் தெரியக் கூடாது. தெரிந்தால் அங்கு பொறாமை வரும். மற்றவர்கள் பொறாமைப்படும் அளவுக்கு வாழ வேண்டும் என அவசியமில்லை. பெற்றவர்கள் பெருமைப்படும் அளவுக்கு வாழ்ந்தாலே போதும். பொறாமை இல்லாதவரே ஒழுக்கமானவர்.

பொறாமையை திருக்குறள் ‘அழுக்காறு’ என்று கூறுகிறது. இத்தகைய குணம் உடையவர்க்கு பகைவர்கள் வேண்டாம். அவர்கள் கொண்ட பொறாமையே கேடு விளைவிக்கும் என்பது வள்ளுவர் கருத்து. திருக்குறள் இவர்களைப் பாவி என்றே திட்டுகிறது. இவர்களிடத்து உயர்வு தோன்றாது. அழுக்காறு நெஞ்சம் பெறுதல் சாதலுக்கு நேரானது. தன்னை உயர்த்திக்கொள்ள முயற்சிப்பதில்லை. அதாவது அடுத்தவன் கால் முடமாகி விட்டால், தான் நடக்க இயலும் என நினைப்பான். தமிழ்நாட்டில் ஒரு பழமொழி, “தனக்கு மூக்குப் போனாலும் பரவா யில்லை. அடுத்தவனுக்கு அது அபசகுனமாக வேண்டும் என நினைத்து தன் மூக்கையே அறுத்துக் கொள்வான்”. கேவலம் இதுக்குப் பிறகும் பொறாமைக் குணத்துடன் வாழ வேண்டுமா?. கண்டிப் பாகப் பொறாமையானது சகித்துக் கொள்




ளப்பட வேண்டியது. எதையும் பொறுமை யோடு தேடு. பொறாமையோடு தேடாதே.

பொதுவாக யார் பொய் சொல்லும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றனரோ அதன் காரணமாக அவர்களிடம் மற்ற கெட்ட குணங்களும் இருக்கும் என்பர். பொய்யினைப் போலவே பொறாமையும் குடிகொள்ளும். எல்லாக் குணங்களும் நம்மிடம் இருந்தாலும், பொறாமை எனும் தீய குணத்தால் இறைவனின் கோபத்துக்கு ஆளாவதுடன், அவன் அருளைப் பெறுவதிலிருந்தும் நம்மை நாமே தடுத்துக் கொள்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பொறாமை கொள் வோர் பின்னால் செல்வதும், அவர்கள் சொற்படி நடப்பதும் மானம் இழந்த வாழ்க்கையாகும். மானத்தை விரும்புவோர் இச்செயலைச் செய்ய மாட்டார்கள். பொறாமை உணர்வு உள்ளோருடன் சிலர் நட்புக் கொண்டுள்ளனர். அது செத்த பிணத்தை அணைப்பது போலவும், பேய் பிடித்து அலைவது போலுமாகும். அவர்களையும் ஒழுக்கமுள்ளவர்களாகக் கருத முடியாது.

வள்ளுவப் பெருந்தகை அதிகாரம்_17இல் அழுக்காறாமை அதாவது, பொறாமை தவிர்த்தல் எனும் அதிகாரத்தின்மூலம் பொறாமையின் பாதிப்புக்களை கூறி யுள்ளார். “அவ்வித்து அழுக்காறு உடை யானைச் செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்” அதாவது, மற்றவர் வளர்சியால் பொறாமை கொள்பவன் வீட்டிலிருந்து திருமகள் விலகிவிடுவாள், மூதேவி வந்து விடுவாள். “அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்துவிடும்” பொறாமை என்பது ஒரு பாவச் செயல் மட்டுமல்ல, அது செல்வத்தை அழித்து, துன்பக்குழியில் தள்ளிவிடும். யாரிடமும் எக்காரணம் கொண்டும் பொறாமைப்படா மல் இருப்பதே மேலான செல்வமாகும். மற்றவர் பெற்ற செல்வம், புகழ் இவற்றைக் கண்டு பொறாமைப்படுபவன், தருமத்தை யும் வளர்ச்சியையும் இழந்து விடுகிறான். பொறாமைக் குணத்தால் பெருமை பெற்று செல்வம் அடைந்தோரும், இல்லை. பண்பாளர்கள் பெருமையிலிருந்து தாழ்ந்து போனதும் இல்லை.

பொறாமைக் குணத்தை நம் கட்டுப் பாட்டுக்குள் அடக்கினால் சாதனை மிக்க பல செயல்களைப் புரிவதற்கு நம்மை வழி நடத்திச் செல்லும். எதிரிகள் உன்னைப் பற்றி சமுதாயத்தில் தவறான எண்ணத்தைப் பரப்புகின்றனர் எனில் நீ வளர்ந்து கொண்டிருக்கிறாய் என்பது அர்த்தம் என எண்ணிக்கொள். பொறாமை தவிர். அது அழுக்கு நிறைந்த வழி. பிறர் நலன் கண்டு மகிழும் இயல்பினைப் பெற்றுக்கொள். பாராட்டும் குணம் பெறு. அமைதி பெறும் இயல்பை வளர்த்துக் கொள். பெறாததை பெற முயலு. பெற்றவர்மீது புழுக்கம் கொள்ளாதே. பொறாமை உள்ளோரிடமிருந்து விலகு. “மிக உயர்ந்த இலட்சியத்தையே எப்போதும் பற்றியிருங்கள். உறுதியாக இருங்கள். பொறாமை, சுயநலம் இவற்றை தவிர்த்து விடுங்கள். கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங் கள். சத்தியத்துக்கும், மனிதகுலத்துக்கும் எப்போதும் உண்மையாக நடந்து கொள்ளுங்கள். உலகத்தையே அசைத்து விடுவீர்கள்” என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

# இன்புடன் வாழலாம்



நடந்துநீ திரிந்தால் நலனுன்னைச் சேரும்
கிடந்துநீ இருந்தால் கிழடுன்னை நாடும்
பழங்களை உண்டால் பலனுன்னை சேரும்
இழப்புகழ் தவிர்க்க இயற்கையை நாடு!

பயிற்சிகள் செய்தால் உயர்ச்சியைத் தொடுவாய்
அயர்ச்சிநீ அடைந்தால் முயற்சிகள் விடுவாய்
தளர்ச்சியை தவிர்த்தால் தலை உயர்ந்திடுவாய்
வளர்ச்சியை நினைத்து வாழ்வினை அமைப்பாய்!

போதனை கேட்டிடல் சாதனை ஆகுமே
வேதனை போக்கிட விரும்பிடு நீயுமே
மாதினை மயக்கத்தை வரையறை செய்திட்டால்
காசினி மீதிலே மாசின்றி வாழுவாய்!

இறைவனை எண்ணினால் இன்புடன் வாழலாம்
குறையெலாம் அகன்றுநீ நிறைவுடன் வாழலாம்
கறையுடை மனத்தினை காணாமல் செய்திடில்
உலகினில் உன்னதம் உன்னுளே உதித்திடும்!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

# அலைபாயும் மனம்




என் மனம் அலைபாயத் தொடங்கி விட்டது. அது என்னை தன் போக்கிற்கு இழுத்து விளையாட விடாமல், ஒரு பந்தை திசை திருப்பி விரட்டிச் செல்வதுபோல் நானும் மிகக் கவனமாக விளையாட என்னை உறுதியோடு இயக்க வேண்டியுள்ளது.
- ட்ரேஸி ஆஸ்டின்

அமைதியான நிம்மதியான மனநிலை என்பது ஞானிகளுக்கும் யோகிகளுக்கும் மட்டும்தான் சாத்தியமா? என்ன செய்து கொண்டிருந்தாலும், யாருடன் இருந்தாலும், ஏன் தனிமையில் இருந்தாலும் இங்கும் அங்குமாக அலை பாய்ந்து மகிழ்ச்சியற்று தவிக்க வைக்கும் மனதிற்கு மருந்து உண்டா இது பலரின் புலம்பல்,

உங்கள் விருப்பத்துக்கும் நீங்கள் இருக்கும் சூழலுக்குமான இடைவெளியே உங்கள் தவிப்புக்கான மூலகாரணம். இது எனக்கானது அல்ல. இது அல்ல நான் என்ற நினைப்பும், என்னை நானாக இல்லாமல் மாற்றி விடுமோ இந்த சூழல், என்ற துடிப்பும் பெரும்பாலும் மனதை அலை பாயச் செய்கிறது.

தான் என்ன செய்தாலும் 47 சதவீதம் அளவு மனது செய்யும் வேலையை விட்டும் வேறு எதிலாவது தாவுகிறது என்கிறது ஆய்வுகள். அப்படி கூடு விட்டு கூடு பாயும் மனம் திக்குத் தெரியாமல் சுழன்று மகிழ்ச்சியற்றுத் தவிக்கத் தொடங்கி விடுகிறது.

எதையோ நோக்கிய ஒரு தேடல் ஒரு பயணம் இதுதான் வாழ்க்கை. இந்தத் தேடல், சொந்த வீடு, நல்ல வேலை, பதவி, புகழ், நல்ல உறவுகள் என ஒருவருக்கொருவர் மாறுபட்டதாக இருந்தாலும் அதன் அடி நாதம் மகிழ்ச்சிக்கான தேடல் மட்டுமே.

அரிஸ்ரோட்டில் மகிழ்ச்சியை “the chief good“ என்கிறார். பாதை எதுவாக இருந்தாலும், அதற்கான பயணம் எந்த வகையில் இருந்தாலும் வாகனம் எதுவாக இருந்தாலும், அந்தப் பயணத்திற்கான குறிக்கோளும் இலக்கும் மகிழ்ச்சி என்ற ஒன்றை நோக்கியே உள்ளது. எந்த ஒரு பொருளோ பதவியோ, பயணமோ அல்லது உறவோ எது என்றாலும் அது மதிப்பு மிக்கது என்பதை விட அது நமக்கு மகிழ்ச்சியைத் தரும் எனும் நம்பிக்கையில் தான் நாம் அவற்றை அடைய விரும்புகிறோம். அந்த எதிர்பார்ப்பில்தான் ஒவ்வொரு வரும் வெவ்வேறு விடயங்களைத் தேடி ஓடிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் நினைத்தது எல்லாம் கிடைத்தாலும் மகிழ்ச்சி மட்டும் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டுதானிருக்கிறது. படிப்போ பதவியோ பணமோ எதுவானாலும் அது கிடைத்த பின்பும் உங்களுக்குள் மகிழ்ச்சி நிரந்தரமாக இல்லையென்றால் உண்மை



யில் மகிழ்ச்சி வேறு எதில்தான் ஒளிந்திருக்கிறது என்பது ஒரு சவாலான கேள்வியாக இன்று நேற்று அல்ல பல்லாயிரம் ஆண்டுகள் பல ஆராய்ச்சி களுக்கு ஆளாகி வருகிறது.

நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம், நம் சுற்றம் சூழல் எப்படி இருக்கிறது, நாம் நேர்மறையான சிந்தனையுடன் இருக்கிறோமா என்பதில் நம் மகிழ்ச்சி சார்ந்திருக்கிறது என்று பொதுவாக சொல்லப்பட்டாலும் இதை ஆராய்ச்சி யாளர்களால் உண்மையில் எல்லா வகையிலும் உறுதிப்படுத்த முடியவில்லை. அதனால் மீண்டும் மீண்டும் ஆய்வுகளும் நடந்து கொண்டே இருக்கிறது.
சமீபத்தில், மனிதர்கள் யாரோடு இருக்கும் போது அல்லது எது செய்யும்போது அல்லது எதை அடையும்போது மகிழ்ச்சி யாக இருக்கின்றனர் என்ற மகிழ்ச்சிக்கான சூத்திரத்தைக் கண்டறிய மேற்குலகில் ஒரு நீண்ட ஆராய்ச்சி நடந்தது. பல நாடு களிலிருந்தும், பலதரப்பட்ட பல்லாயிரம் பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களின் மகிழ்ச்சியின் அளவை நிர்ணையிக்கும் போது நிமிடத்திற்கு நிமிடம் கூட அல்ல நொடிக்கு நொடி அது மாறுபட்டுக் கொண்டே இருப்பது தெரிய வந்தது.
அவர்கள் தற்போது என்ன செய்து கொண்டிருக்கின்றனர். அந்த நேரம் அவர்களது மனம் அவர்கள் செய்யும் வேலையில் ஆழ்ந்து இருக்கிறதா அல்லது வேறு எதிலாவது அலை பாய்ந்து கொண்டிருக்கிறதா. அப்படி வேறு நினைவுகளில் இலயித்து இருந்தால் அது எத்தகைய நினைவு, அது மகிழ்ச்சியான நிகழ்வா அல்லது சங்கடமான நினைவு களா அல்லது இரண்டுக்கும் பொதுவான சாதாரணமான நினைவுகளா போன்ற கேள்விகள் அந்த ஆய்வுகளில் கேட்கப் பட்டது. அத்துடன் இறுதியாக அந்த நேரத்தில் அவர்கள் மனம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது என்பதும் குறித்துக் கொள்ளப்பட்டது.

எந்த ஒரு வேலையையும் செய்யும்போது அதிலேயே கவனமோடு இருக்கும்போது மனிதர் மகிழ்ச்சியாக இருப்பதாக அந்த ஆய்வின் முடிவில் தெரிய வந்தது. அதாவது வேலை அத்தனை விருப்பமானதாக இல்லாவிட்டலும் அதில் மூழ்கி செய்யும்போது அது அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது

அப்படி இல்லாத நேரங்களில் பெரும் பாலும் மனித மனம் அலை பாய்ந்து கொண்டே இருக்கிறது. இது வேறு எந்தப் படைப்பினங்களுக்கும் இல்லாத ஒரு குணம். அதனால் யாருடன் இருந்தாலும் எது கிடைத்தாலும் என்ன செய்து கொண்டிருந்தாலும் அலை பாயும் அந்த மனம் அந்த நொடி எதை சிந்திக்கிறதோ அதற்கேற்ப அவர்கள் மகிழ்ச்சியின் அளவும் மாறிக் கொண்டே இருக்கிறது என்கிறது ஆய்வின் முடிவு.

ஒருவர் கணினியில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் அதே நேரம் அவர் மனம் நேற்று நண்பருடன் நடந்த உரையாடல் களை நினைக்க தொடங்கும், அடுத்த நொடி ஏன் இந்த வேலையில் சேர்ந்தோம் என அங்கலாய்க்கவும் செய்யும்.

அப்படி அலை பாயும் மனதை வரமாகவும் சாபமாகவும் மாற்றுவது உங்கள் கைகளில்தான் இருக்கிறது. இப்படி மனம் அலை பாய்கிறதே என்று அதனை ஒரு குறையாக எண்ணாமல், இப்படி ஒரே நேரத்தில் பல விடயங்களை சிந்திக்கக் கூடிய திறமை மனிதருக்கு மட்டும்தான் இருக்கிறது என்று அதனை ஒரு கூடுதல் திறமையாக எண்ணிப் பாருங்கள் என்கிறது மனஇயல்.

மனதின் இந்த அலைபாயும் இயல்பை வைத்து நம் மகிழ்ச்சியை அதிகரிக்கச் செய்து விடலாம். சந்தோஷமான தருணங்களில் கூட வருந்தக்கூடிய நினைவுகளில் மனதை அலை பாய விடாமல் ஏதாவது சங்கடமான நேரத்தில் கூட சந்தோஷமான விடயங்களில் மனதை அலை பாயவிட்டால் அது மகிழ்ச்சியை தக்க வைக்கும். ஏனென்றால் மனம் அலை பாயும்போது பொதுவாக தேவை யற்ற விடயங்களையே நினைக்கிறது. தான் விரும்பி நடக்காத ஒன்றிற்காக ஏங்குகிறது. நடந்த ஒன்றிற்காக வருந்துகிறது. செயலோடு எண்ணம் ஒன்று படாமல் அலை பாயத் தொடங்குவதால் செயலும் மகிழ்ச்சியைத் தராமல் அயர்ச்சியை ஏற்படுத்துகிறது.

சாதரணமாக ஒரு நாற்காலியில் அமர்ந் திருக்கும் போது எழ வேண்டும் என்றால் சட்டென்று எழுந்து விடுவீர்கள். இப்போது ஒரு சிறு விளையாட்டை செய்து பாருங்கள். நீங்கள் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொள்ளுங்கள். உங்கள் நண்பரை உங்கள் எதிரே நின்று கொண்டு உங்கள் நடு நெற்றியில் ஒற்றை விரலை வைத்துத் தொட்டுக் கொண்டிருக்கச் சொல்லுங்கள். நண்பரின் விரல் உங்கள் நெற்றியில் தொட்டுக் கொண்டிருக்கும் நிலையில் வழக்கம் போல் எழுந்திருக்க முயற்சி செய்யுங்கள். உங்களுக்கு அது எளிதில் சாத்தியமில்லை என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

மெல்லிதாகத் தொட்டுக் கொண்டிருக்கும் ஒரு விரல் நுனி உங்களின் முழு உடலை யும்விட வலுவானதா? நிச்சயம் இல்லை. ஆனால் அது உங்கள் உடலின் ஆதி மையத்தை அசைய விடாமல் செய்து உங்களை செயலிழக்கச் செய்துவிடும். அதுபோல்தான் அலை பாயும் உங்கள் எதிர்மறை எண்ணங்களும் உங்கள் மகிழ்ச்சியின் மையத்தில் கை வைத்து அதை உங்களால் உணரவிடாமல் செய்து



விடும்.
எந்த வேலையாக இருந்தாலும் நீங்கள் செய்யும் வேலையை விரும்பி செய்தால் மனம் அதில் இலயித்து விடும். வேலை யும் சிறப்பாக அமையும், மகிழ்ச்சியும் உங்கள் மனதில் நிறையும். சில பொழுது களில் உங்கள் மனம் அலைபாயத் தொடங்கினால் அதை இயல்பாக எடுத்துக் கொண்டு ஒரு தேர்ந்த கால் பந்தாட்ட வீரர்போல் அதை விரட்டி மகிழ்ச்சியான நிகழ்வுகளுக்குள் செலுத்துங்கள், மகிழ்ச்சி யான மன நிலை உங்கள் வேலையை திறம்பட செய்வதற்கான ஆற்றலைத் தரும். மகிழ்ச்சி மலரும்.



சைக்கிள் கற்றுக்கொடுக்க அப்பா நம்மிடம் காட்டிய பொறுமையை அவருக்கு நாம் மொபைல் கற்றுக்கொடுப்பதில் காட்டுவதில்லை.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & FINCH**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & Parking. No Pets & No Smoking. Avail. July 01, 2022.
**416.735.4240 / 416.729.9858**

---

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom newly renovated bsmt for rent. Laundry. Close to all facilities. Avail. Aug. 01, 2022.
**647.761.6294 / 437.217.6700**

---

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Small family or couple preferred. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: **647.740.7438**

---

**BOVAIRD & DIXIE (Brampton)**
2 bedroom bsmt for rent. Sep.entrance, 1 parking. Close to all facilities. No smoking/pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.241.8947**

---

**NEILSON & FINCH**
2 bedroom bsmt for rent, full bathroom, sep. entrance and 1 parking. Wifi & utilities included. Close to TTC. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: **416-625-6733**

---

**MORNINGSIDE & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Sep. entrance parking. Close to school, TTC & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.515.1631**

---

**KENNEDY & EGLINTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: 674.309.2480

---

**MIDDLEFIELD & DENISON**
2 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry & 1car parking. 2 mins. walk to YRT bus stop & Schools. Avial. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.1820**

---

**BIRCHMOUNT & LAWRENCE**
1 bedroom bsmt for rent. Sep. entrance,Parking, laundry. Close to all facilities. Avail. JULY 01, 2022.
**416.826.3870 / 647.859.1020**

---

**KENNEDY & EGLINTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
**647.869.3509 / 416.271.2377**

---

**MIDDLEFIELD & HIGHGLEN**
1 bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.823.7576**

---

**9TH LINE &14TH AVENUE**
2 Bedroom new bsmt for rent. Sep. entrance, parking. Students or small family preferred. Close to Bus. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: **416.829.3212**

---

32ஆவது ஆண்டில்

# விளம்பரம்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## ROOM FOR RENT

**NEILSON & MCLEVIN**
One room for rent in a basement. Laundry. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **647.766.7779**

---

**TAPSCOTT & FINCH**
1bedroom for rent in a 3 bedroom bsmt. Sep. entrance. Close to bus & all facilities. Single male preferred. **No** alcohol, smoking & pet. Avail. June 15, 2022.
தொடர்புகளுக்கு: **647.771.3735**

---

**BROCK & KINGSTON**
1 room for rent in main floor. Shared kitchen. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.505.1131**

---

**DUNDAS & THICKSON**
One room for rent in Whitby . Includes high speed internet, laundry & shared kitchen. Close to Go Train and all other facilities.
தொடர்புகளுக்கு: **647.527.9922**

---

**MARKHAM & EGLINTON**
Rooms for rent with food. Seniors Preferred.
**Please Call : 647.667.0482**

---

**BRIMLEY & EGLINTON**
Room for rent. Laundry. No smoke. No parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.294.0193**

## BASEMENT FOR RENT

**HARMONY RD. & TAUNTON RD.**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. Parking and free wifi. Minutes to Durham college and mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.504.2924**

## BASEMENT FOR RENT

**MEADOWALE & SHEPPARD**
2 bedroom bsmt for rent. Laundry, parking & internet. No smoking & no pets. Close to hwy 401, TTC, Centennial College & U of T (Scarborough). Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.821.9185**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## HOUSE FOR RENT

**BELLAMY & LAWRENCE**
3 Bedroom house for rent. Parking included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.505.9465**

---

**WESTNEY & HWY 401**
4 bedroom house for rent. 4 parking plus 2 bedroom bsmt with sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

---

**NEILSON & MCLEVIN**
Two bedrooms condo. town house for rent. 1 car parking & 1 washroom.
**Please call: 647- 533 -2059**

---

**BURKHOLDER & TAUNTON (Pickering)**
3 bedroom plus den brand new semi detached house for rent. Close to all facilities. Avail. immediately.
**416.587.6564 / 647.678.0611**

---

**NEILSON & SHEPPARD**
4 bedrooms house with 2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking.
தொடர்புகளுக்கு: **416.409.6480**

## BASEMENT FOR RENT

**NEILSON & FINCH**
1 bedroom bsmt for rent. Sep. entrance & free wifi. Very convenient location with close by bus stop, schools, grocery & convenience stores. Avail. immediately.
**Contact: 647.468.8403**

## BASEMENT FOR RENT (ALSO ROOMS)

**KENNEDY & EGLINTON**
**LIVING, BEDROOM & KITCHEN + ALL FACILITIES.**
**PARKING - PRIVATE ENTRANCE**
**PLEASE CALL:**
**416.285.4695/ 647.636.2364**

## BASEMENT FOR RENT

**14TH AVENUE & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, Laundry. Close to elementary school, park & bus. Avail. immediately.
**416.904.7531 / 416.558.4929**

மேலும் பக்கங்கள் 13,15,16,17

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & ELLESEMERE**
1 bedroom bsmt for rent. Sep. entrance. Open Kitchen Style. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.685.8937**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**
1 bedroom bsmt for rent. Laundry & parking. Small / working family or female students or senior family preferred. No pets or no smoke. Close to HWY 401, mall, TTC & university. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416-729-4939**

## BASEMENT FOR RENT

**TAPSCOTT & MCLEVIN**
1 bedroom bsmt for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.998.3535**

## BASEMENT FOR RENT

**PHARMACY & FINCH**
2 bedroom walk-out bsmt for rent. Sep. ent., parking, laundry. Close to TTC, mall, schools & hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.588.5490**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
**2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry. No Parking.Single or couple preferred. Close to all facilities. Avail. immediately.**
**647.787.3784 / 905.294.4382**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14 th AVENUE**
Newly renovated beautiful 4 bedroom bsmt for rent. 2 bathrooms Sep. entrance, 2 Parking & lots of upgrades. Minutes away from hwy 407. Avail. immediately.
**Call Ram - 416.722.7351**

## BASEMENT FOR RENT

**Bayly & Audley**
Neat & Clean & spacious 1 bedroom, kitchen & 1 bath in the bsmt avail. for rent in a family-friendly neighborhood. Sep. entrance. Parking, Laundry. No smoking & no pets. Close to HWY 401. Close to grocery store, community centre & pharmacy.
**Call: 416.998.8156**

## BASEMENT FOR RENT
**MCCOWAN & HIGHGLEN**
2 bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to all facilities. Avail. August 01, 2022.
தொடர்புகளுக்கு: **647.972.7620**

## ROOM FOR RENT
**NEILSON & TAPSCOTT**
1 Room for rent in a 2 bedroom condo. Single Female preferred. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647-771-3054**

## BASEMENT / CONDO FOR RENT
**MARKHAM & ELLESMERE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry.
**MC.COWAN & FINCH**
2 bedroom & 2 bathroom CONDO for rent .
**416.666.5627 / 416.414.9905**

## BASEMENT FOR RENT
**PORT UNION & HWY 401**
2 Bedrooms bsmt Apartment for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.831.4725**

## BASEMENT FOR RENT
**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to TTC, Datta food & Mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.8723**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & MCNICOLL**
2 bedroom bsmt. for rent. Sep entrance, laundry & parking. Close to TTC and other facilities. Avail. August 01, 2022.
தொடர்புகளுக்கு: **416.720.5933**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & MCNICOLL**
1 room for rent in a 2 bedroom bsmt. Sep. entrance, no parking, laundry & internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.371.5444**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
1 Room for rent in a bsmt. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.825.0566**

## BASEMENT FOR RENT
**14 th AVENUE & 9th LINE MARKHAM**
**2 bedroom newly built bsmt for rent. 2 full washrooms. Good location & Close to schools & HWY.**
தொடர்புகளுக்கு: **416.918.9848**

## BASEMENT FOR RENT
**MARKHAM & 14th AVE.**
2 bed room bsmt for rent. 1 washroom, Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296. 7932**

## BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
**2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry. No Parking. Single or couple preferred. Close to all facilities. Avail. immediately.**
**647.787.3784 / 905.294.4382**

## ROOM FOR RENT
**MIDDLEFIELD & FINCH**
One bedroom for Rent. Female Student preferred. Avail. immediately. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **416.953.2597**

## ROOM FOR RENT
**KENNEDY & EGLINTON**
1 Room for rent in a 2 bedroom aprt. Working Students, 65+seniors preferred. Close to TTC, Kennedy subway. No pets, smoking, drinking. Avail. immediately
**416.857.5252 / 416.752.4444**

## ROOM FOR RENT
**MCCOWAN & DENISON**
One bedroom for Rent. All inclusive. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.522.3314**

## ROOMS FOR RENT
**ROSSLAND & SALEM**
Rooms for rent. Free transportation for students to the Oshawa Campus.
தொடர்புகளுக்கு: **416.566.9411**

## HOUSE FOR RENT
**NEILSON & SHEPPARD**
3 Bedroom house for rent. 2 full washrooms in upstairs. Also 2 bedrooms & 1washroom in the bsmt. Sep. entrance. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: **416.569.5319**

## HOUSE FOR RENT
**9th Line & 16th Avenue**
3 Bedroom house for rent. 2 wash rooms, 3 parking spots & laundry. No pets. Close to Stouffville Hospital. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: **647. 205.7194**

## HOUSE/BASEMENT FOR RENT
**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent.
3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE FOR RENT
**CHURCH & ROSSLAND**
4 Bedroom two story detached house for rent. 2 1/2 washrooms & 2 parking. Avail. August 01, 2022. Close to public transportation & park.
தொடர்புகளுக்கு: **416.509.7247**

## HOUSE FOR RENT
**WESTNEY & KINGSTON RD.**
3 Bedroom Bungalow house for rent. 3pc washrooms, kitchen, separate laundry, 2 bedroom bsmt, Sep.entrance, 3pc washroom. Avail. August 01, 2022. Close to Costco & all Shopping mall.
தொடர்புகளுக்கு: **416.560.4152**

## CONDO. FOR RENT
**FINCH & NEILSON**
1 bedroom condo for rent. Parking, laundry, internet & utilities. Close to Mall & all other facilities.
தொடர்புகளுக்கு: **416.629.0065**

## CONDO. FOR SALE
2 Bedroom **Condo.** for sale. Close to transportation, schools & community center. Very convenient location. Price negotiable.
**Please Call: 416.648.7283**

## BASEMENT FOR RENT
**BROCK & KINGSTON**
1 bedroom, 1 full washroom and a parking also available. Sep. entrance. walking distance to Pickering Town centre. Close to HWY 401 & all shopping facilities. Suitable for Small family or couple. No pet & No smoking. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416. 731.8542 / 416.301.4783**

## HOUSE FOR SALE / RENT
**HARMONY & HWY 401 ( OSHAWA)**
Newly renovated 3 bedroom house for sale or rent. 2 full washrooms, Parking & laundry . It has 3 bedroom walk- out bsmt with 2 full washrooms. We can help to get First & Second Mortgages. **Please Contact : 416.305.0858**

## ROOMS FOR RENT
**MORNINGSIDE & SEWLLES**
Multiple bedrooms available with bathroom & kitchen.
தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).
Contact owner about renting price.
தொடர்புகளுக்கு: **416.908.9494**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## பராமரிப்பாளர் தேவை

***9TH LINE & MAJOR MACKENZIE***

பகுதியில் வயதான தம்பதியரைப் பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை. சமையல் வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **416.996.9319**

## வாடகைக்கு கொடுத்திட,பெற்றிட

Rooms: 5 BR, 4 BR, 3 BR, 2 BR, 1 BR APT, House, Condo, Basement GTA, Totonto, Scarborough, york, Peel, Durham, Halton ஆகிய பகுதிகளில் **A1 Canada Rental Services**

**MR Ratha Francis Xavier**

**416.857.5252 / 416.752.4444**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR House, Condo, Basement**

வாடகைக்கு உள்ளது.

அழையுங்கள்- **647.861.8240**

## வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo, Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட

அழையுங்கள்:

**647.402.2937**

## HELP WANTED

***MARKHAM*இல் உள்ள தமிழ் உணவகத்திற்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை.** தொடர்புகளுக்கு:

**647.205.9243**

## HOUSE FOR RENT

***SIMCOE ST. & BRITANNIA (OSHAWA)***

3 story townhouses with 3 bedrooms & 2.5 washroom lease in Oshawa in peaceful neighborhood . Close to all amenities, stores, public transit, Oshawa university & Durham college close by and 500m Costco is there. They also have banks nearby gas stations Tim Horton's, Starbucks, LCBO and fresh Co behind the house. This house is two years old and the rent amount $2,700 plus bills.

***Please Call - Kumar: 416.456.3843***

## HOUSE FOR RENT

### HARWOOD & ROSELAND

Ajax,Ontario - For Rent – Free hold townhouse - 2,000 sq. feet - 3 bedrooms & 2.5 bathrooms. Hardwood floor On Family/ Living Room. Steps to Schools, Shopping, Parks. Spacious Kitchen. W/O To Private Fenced Yard. ***Please Call: 647.588.6214***

## AZ DRIVERS WANTED

**Seeking for experienced AZ drivers for CANADA & USA.**

***Requirements:***

- ***Minimum 3-4 years of experience.***
- ***Cross Border experience***
- ***Good Communication Skills***
- ***Clean Abstract***

***Please Contact - 416-835-6701***

## CLEANING JOB

***MAJOR MACKENZIE & MARKHAM***

பகுதியில் துப்பரவுப் பணிக்கு 2 பேர் தேவை. 7 நாட்கள் வேலை. வேலை நேரம் அதிகாலை 5 மணி முதல் 8 மணிவரை. 21/2 மணி நேரம். அனுபவமுள்ள ஆட்கள் தேவை. ***Family preferred.***

தொடர்புகளுக்கு: **647.701.9809**

## USED CARS WANTED

USED TOYOTA CARS, VANS WANTED. ANY CONDITION.

**Call:**

**437.688.6305**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

**Contact : பிறேம்-647.835.5244**

## மணமகள் தேவை

1991இல் Canadaஇல் பிறந்த இந்து வேளாளர்குலத்தைச் சேர்ந்த Federal Govt.இல் நல்ல உத்தியோகத்தில் உள்ள மணமகனுக்கு மணமகளை தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு: **647.248.3644**

## மணமகன் தேவை

**31 வயது கணவனை இழந்து 8 வயது மகனுடன் இலங்கையில் வாழும் இளம் பெண்ணுக்கு வெளிநாட்டில் வாழும் துணை ஒருவரைத் தேடுகிறோம்.**

***077.605.4756 Viber***

***076.326.2163 Viber***

## பராமரிப்பாளர் தேவை

ஸ்காபரோவில் வாழும் நடமாடக்கூடிய முதியவர் ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை. அனுபவம் தேவை இல்லை.

***Live in caregiver needed.***

***Experience not needed.***

தொடர்புகளுக்கு: **647.540.9520**

## பராமரிப்பாளர் தேவை

***MCLEVIN & NEILSON*** இல் வயதான பெண்மணியைப் பராமரிக்கப் பராமரிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு: **416.629.6248**

## HELP WANTED

Looking for ***Drivers and Cook*** for a ***PIZZA RESTAURANT*** in ***OSHAWA*** (24 Simcoe St. N, Oshawa, L1G 4R8)

Full time & Part time job available.

தொடர்புகளுக்கு: ***416.826.4205***

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820 / 647.868.2440**

## PICK UP & DROP OFF

வயதானவர்களை Doctors office, physio போன்ற இடங்களுக்கு Pick up & drop off உதவி செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: **647.646.2616**

## COOK WANTED

WILD WING

Markham & 16th Ave.

Cooks wanted.

FULL TIME / PART TIME AVAILABLE.

தொடர்புகளுக்கு: **647.961.2355**

## COOK / ROTTY MAKERS WANTED

***Ajax*இல் அமைந்துள்ள *ROTTIES & ROLLS Restaurant*இல்** வேலை செய்வதற்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

Full time & part time jobs available.

Please send your resumes to: ***jeg21@hotmail.com***

தொடர்புகளுக்கு: 289.818.5077

## COOK / KITCHEN HELP WANTED

**VICTORIAPARK & HWY 401** (Scarborough)இல் அமைந்துள்ள ENGLISH PUBக்கு Experienced LINE COOK, COOK HELP & WAITRESS wanted immediately. FULL TIME / PART TIME.

Please contact at **416-566-9994**

## JOB JOB JOB

துப்பரவுப் பணிக்கும் மேற்பார்வையாளர் வேலை செய்வதற்கும் Cleaning company ஒன்றுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர். அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. வாகன வசதி உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

Looking for a supervisor & employees for a cleaning company.

தொடர்புகளுக்கு: ***647.400.7101***

# TUTORING

## FRENCH TUTION

Core French, FSL classes and Immersion classes for Ontario School Boards are handled by an experienced teacher working with TCDSB and YRDSB. French for beginners and coaching for TEF are offered.

**Contact: Dr. Jayamarie S. Tamby., M.A., B.Ed., M.Phil., Ph.D.**

தொடர்புகளுக்கு: **(647) 385.7418**

# HELP WANTED / Restaurant & Bar

**ROSSLAND RD E. & GARDEN ST. (WHITBY)**

**Experience Required**:
- Front/Back Manager
- Line Cook (Chef)
- Bartender / Waiter

**No Experience** :
- Kitchen Helper
- Food Runner
- Dishwasher

**CALL: 647-802-7021**

*Mention Vlambaram AD when calling*

# BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC.**

**(SCARBOROUGH)**

உங்கள் பயணத் தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

# HELP WANTED

**IVORY LAUNDRY** in Scarborough. ( 21 Canadian Road)

Looking male employees for helping with cleaning and arranging customers stuffs. வாடிக்கையாளர்களின் பொருட்களை சுத்தம் செய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் உதவுவதற்காக ஆண் வேலையாட்கள் தேவை. Female employees for packaging and arranging. பெண் பணியாளர்கள் packaging மற்றும் arranging செய்வதற்குத் தேவை.

*Please contact :(Tamil) 647.688.9805 / Direct contact: (Jackie) 647.628.2758*

# COOK WANTED

## RHINOS ROADHOUSE

**5078 Rice lake Drive, Bewdley, Ontario.**

We are looking to join our team. Line cooks, prep cooks full time hours. We are open Monday to Sunday 8am to 9pm. Must be available weekend days nites.

***Please contact - Kodeeswaran : 289.244.8555***

# HELP WANTED

PICKERING ல் அமைந்துள்ள ITALIAN TAKE-OUT RESTAURANTக்கு PIZZA MAKER, KITCHEN HELPER & CASHIER தேவைப்படுகின்றனர். அனுபவம் உள்ளவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும். ***MOHAN- 416.722.6557***


உண்மையாகப் பேசிப் பழகு...
உன்னை சுற்றி ஒருத்தன் இருக்கமாட்டான்...
பொய்யாகப் பேசிப் பழகு...
உன்னை சுற்றி ஒரு கூட்டமே இருக்கும்.


# RENT WITH US

We help the Landlords to find quality tenants in less time. Rent your houses, basements, condos., apartments through us. Our service is all over GTA. For further details please contact :

**647.832.6899**

# RENTAL SPACE WANTED FOR STUDENTS

*We are working with a group of students who are looking to rent rooms , house or basement apartments in Scarborough and surrounding area.*

உங்களது *rooms , house or basement* இனை சட்டரீதியாக *University / College Students* இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட

**Logee - 416.272.6811 / Hari - 647.262.8490**

*HomeLife Future Realty Inc. Brokerage*

# RENOVATION

- *Plumbing* • *Painting* • *Electric* • *Tiles*
- *Basement* • *Hardwood* • *Laminating*
- *Kitchen* • *Landscaping* • *Interlock*

ஆகிய வேலைகள் செய்துகொடுக்கப்படும். அழையுங்கள்

***Dinesh: 647.625.2239 / drsharvin15@gmail.com***

# HELP WANTED

We are Looking for Cook & Cashier for Canadian restaurant in Oshawa. Full time & part time available.

சம்பளம் மற்றும் சலுகைகள் பேசி தீர்மானிக்கப்படும்.

Please Call: 416.660.8442

# JOB JOB JOB

**MARKHAM & MCNICOLL**

**SCARBOROUGH**இல் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு Cashier வேலைக்குப் பெண் பணியாளர் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு: ***647.656.1416***

# LAUNDRY BUSINESS FOR SALE

*Business only sale. 900 Sqft. Surrounded by apartment Buildings, Over 20 years business. New Maytag washer 12 nos, Dryers 16 nos, Tank less water heater, Gross rent $2,260, OSHAWA - TAUNTON / SIMCOE*

*Please Call: Raja - 416.315.9397*


## அமைதி...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

ராவத் கூறுகிறார். "நீங்கள் தான் அந்த மூலவளம். அமைதிக்கான தாகம் உங்கள் உள்ளேதான் உள்ளது. அத்துடன் உங்கள் உள்ளேதான் இனிமையான தண்ணீரைக் கொண்ட கிணறும் காணப்படுகிறது. தாகமும் அதை தீர்த்துக் கொள்வதற்கான வழியும் உங்கள் உள்ளேதான் உள்ளது. உங்கள் வாழ்வில் இந்தச் சாத்தியத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் ஆரம்பியுங்கள். உங்களுக்கான பதில் இங்கேதான் உள்ளது.

அமைதியில் இருப்பதற்கு என்ன செய்யவேண்டும் என நான் எவருக்கும் கூறுவதில்லை. வித்தியாசம் ஒன்றை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் பற்றித்தான் நான் கூறுகிறேன். என்னதான் நடந்தாலும் நாம் அமைதியை பெறுவோம். என்னதான் நடந்தாலும்.

wpm Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

**Brampton – Bramalea/Country Side – Semi-Detached (3Brm + 3Bath) [$3,200/m]**
**Mississauga – Burnhamthorpe Rd/Confederation – Condo (2+1Brm + 2Bath) [$3,700/m]**
**Stouffville– 10th Line/ Main St - Detached (2Brm + 1Bath) [$1,800/m]**
**Stouffville– York Durham/Hoover Park - Detached (4Brm + 3Bath) [$3,175/m]**
**Toronto – Ellesmere/Conlins – Bsmt (2Brm + 1Bath) [$1,500/m]**
**Toronto – Bathurst/Lakeshore – Condo (1Brm + 1Bath) [$2,300/m]**
**Toronto – Markham Rd/Painted Post Dr – Detached (3Brm + 1Bath) [$2,600/m]**

**Available for Rent**

**Oshawa – Wilson Rd S/King St E - Detached (3Brm +1Bath) [$2,600/m]**
**Whitby– Thickson/Manning - Detached (23+1Brm +3Bath) [$2,600/m]**
**Pickering– Rosebank;Strouds Lane - Bsmt (2Brm +1Bath) [$2,000/m]**
**Pickering– Whites Rd/Taunton – Town House (3Brm +4Bath) [$3,200/m]**
**Ajax– Salem Rd/Rossland Rd/Audley Rd – Detached (4Brm +3Bath) [$3,900/m]**
**Ajax– Church/Rossland Rd – Detached (3Brm +3Bath) [$3,300/m]**
**Ajax– Westney Rd/Ravencroft – Detached (3Brm +2Bath) [$2,600/m]**

**BUY / SELL/ LEASE / INVEST**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களை எப்படி தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வாழ்ந்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் எனது 32 வருட அனுபவம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

கரு கந்தையா **- 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.


# அமைதி அடிப்படையானது

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
**www.timelesstoday.com**
**www.premrawat.com**

## *Peace is Fundamental*

மனிதருக்கு அமைதி மிக அடிப்படையானது என்றும், அமைதி, கௌரவம், செழிப்பு என்பன பற்றிய செய்தியை உலகெங்கும் உள்ள மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகத் தனது வாழ்நாளை அர்ப்பணித்துள்ள அமைதியின் தூதுவரான பிரேம் ராவத் அவர்கள் கூறுகின்றார்.

“அமைதிக்கான தேவை ஆவணம் ஒன்றினால் உருவாக்கப்படவில்லை”. ஒருவன் பணக்காரனாக இருந்தால் என்ன ஏழையாக இருந்தால் என்ன, வெற்றி அடைந்தவனாகவோ அல்லது வெற்றி அடையாதவனாகவோ இருந்தால் என்ன, இது எல்லா மனிதருடனும் உடன்பிறந்த தொன்றாகவும், அடிப்படை ஆவலால் உருவாக்கப்பட்டுள்ளதும் ஆகும். இந்த உடன் பிறந்த ஆவல்தான் தொன்று தொட்டு மீண்டும் மீண்டும் அமைதியைத் தேடுவதற்கு எம்மை உந்துகிறது.

திரு. ராவத் அமைதியை யுத்தமற்ற ஒரு நிலையாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளதாக அடிக்கடி கூறுவதுண்டு. நாம் யுத்தம் என்பது இரு நாடுகளுக்கு இடையே நடைபெறுவதாகவும், அமைதி என்பது அந்த யுத்தத்தை நிறுத்துவதற்காக நடைபெறும் ஒன்றெனவும் எண்ணுகிறோம். எனினும் யுத்தமானது இரு மனிதருக்கிடையேயும் ஏற்படமுடியும். அத்துடன் ஒரு மனிதனின் உள்ளேயும் யுத்தம் ஏற்படலாம். நாடுகளுக்கிடையேயான யுத்தத்தை உடன்படிக்கை ஒன்றின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரலாம் என அவர் கூறுகிறார். இரு மனிதருக்கிடையேயான யுத்தம் ஒரு புரிந்துணர்வின் மூலம் நிறைவடையலாம். ஆனால் மனிதருக்குள்ளே ஏற்படும் பெரும் யுத்தமானது மிகவும் மூர்க்கமானதாகும். அது எமது அடிப்படையையே அழித்துவிடும். அந்த யுத்தத்திற்கு எவ்விதம் எம்மால் ஒரு முடிவை ஏற்படுத்த முடியும்?

அமைதி பற்றி மிக்க ஆவலுடன் கூறிய மக்கள் “நீங்கள் எதைத் தேடுகிறீர்களோ அது உங்கள் உள்ளேதான் உள்ளது” எனக் கூறியுள்ளனர் என திரு. ராவத் கூறுகிறார். “நீங்கள்தான் இந்தப் பூமியில் அமைதிக்கான மூலமும் வளங்களும் ஆவீர். இந்த வாழ்வில் எமது சொந்த நிகழ்ச்சி நிரல்களால் திசை திருப்பப்படாமல் அமைதியை உணர்வதற்கு அவசியமான அந்த மெஞ்ஞானம், அந்தப் புரிந்துணர்வு, இதுதான். ஆனால் அந்த உயிருடன் இருப்பதற்கான சந்தர்ப்பத்துடன் வரும் அந்த நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொள்வதிலும் புரிந்துணர்வதிலும் தான் உள்ளது.

எம்மிடையே உள்ள வேற்றுமைகளை அல்லாமல் ஒற்றுமைகளைப் புரிந்து கொள்வதில் இருந்தே இது ஆரம்பிக்கிறது. இப்பொழுது இந்த உலகில் மக்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள், எந்த மொழியை அவர்கள் பேசுகின்றனர், அவர்கள் என்ன செய்கின்றனர் என்றுதான் பார்க்கின்றோம். உயிரைக் காத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் ஒன்றின்போது உதாரணமாக பசுபிக் சமுத்திரத்தின் நடுவில் மக்கள் ஓர் உயிர்காக்கும் கட்டுமரத்தில் இருக்கும்போது அவர்கள் எங்கே இருந்து வந்தனர் என்பதைப் பற்றிக் கதைக்க மாட்டார்கள். உயிர் காத்தலின்போது நீர் சேகரித்தல், தாக்கக் கூடிய மூலங்களில் இருந்து விலகி இருத்தல், உணவு பெறுதல் போன்ற உயிர் வாழ்விற்கு அவசியமானவற்றைப் பற்றிச் சித்திப்பார்களே அல்லாமல் உயிர் வாழ்விற்கு அவசியமற்றவை எல்லாம் கைவிடப்பட்டு விடும். ஆகவே எம்மிடம் உள்ள எல்லா வேறுபாடுகளிடையேயும் எங்கள் தாகம் எல்லோருக்கும் பொதுவானது.

அமைதி. இது ஒரு புதிய எண்ணக் கருத்தல்ல என்று திரு. ராவத் கூறுகிறார். “அமைதிக்கான ஆவல், அமைதிக்கான எண்ணக் கருத்து, அமைதிக்கான சிந்தனையானது இந்த வருடமோ அல்லது கடந்த வருடமோ அல்லது அதற்கு முன்னைய வருடத்திலோ ஆரம்பமான தொன்று அல்ல. மக்கள் இப்பூமியின்கண் தோன்றிய காலத்தில் இருந்தே இது மிகவும் அடிப்படையானது. இதைத்தான் அவர்கள் எதிர்பாத்திருந்தனர். இதுதான் அவர்களுக்குத் தேவையாக இருந்தது. எனினும் அடிக்கடி அந்த அமைதிக்கான ஆவல் புறக்கணிக்கப்படுகிறது. அமைதியைப் புறக்கணிப்பதற்கு அதிகளவு முன்னுதாரணங்கள் இருக்கலாம். அத்துடன் அது அதிகளவு அவல நிலையை கொண்டுவந்துள்ளது.

அமைதியைக் கண்டுகொள்வதற்கான முன்னுதாரணங்கள் எங்கேயோ ஆரம்பிக்க வேண்டும். இன்னுமொரு தலைமுறை இப்பூமியின்கண் அமைதியைக் கண்டு கொள்வதற்காக உள்ளத்தினுள் எழும் மிகவும் அடிப்படையானதும் மூலாதாரமானதுமான அழைப்பை புறக்கணித்து விட்டு எங்கே போவார்கள்? அதைத் தொடர்ந்து புறக்கணிக்க முடியாது. இதைக் கூறுவதற்கான கடமை எங்களுக்கு தரப்பட்டுள்ளது. அமைதி இன்றே அல்லாமல் நாளைக்கு அல்ல. நாளை என்பது ஓர் எண்ணக்கருத்து மட்டுமே. எல்லா நாளைய தினங்களும் இன்றைய தினமாகத்தான் தோன்றுகிறது. இன்றைய நாளில் உங்கள் உண்மை நிலையைப் பற்றிக் கண்டு கொள்ளுங்கள். இன்றைய நாளில் உங்கள் துணிவைக் கண்டு கொள்ளுங்கள். இன்றைய நாளில் அமைதியில் இருப்பதற்கான சாத்தியத்தை, ஆனந்தத்தில் இருப்பதை, நீங்கள் யாரோ அதாக இருப்பதற்கான சாத்தியத்தைக் கண்டு கொள்ளுங்கள்.” அமைதியானது ஒவ்வொரு தனிமனிதனின் உள்ளேயும் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என திரு.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)




# சாம்பல் நாற்காலி

வணிகநூலால் பின்னப்பட்டு
நீரில் அசைந்து செல்லும்
வலையில் தலை செருகிப் பிடிபடுகின்றன
ஐந்திணைக் கடலில் வளர்ந்து வாழ்கின்ற
அறிவு மயங்கிய மனிதமீன் இனங்கள்

தொப்புட்கொடி உறவு பேசிக்கொண்டு
வந்து இன்முகம் காட்டி இறங்கியோர்
குண்டு போட்டுச்சென்ற துன்பங்கள்

சிதறிய துண்டுகளாக முறிந்து விழுந்த
கோபுரத்தில்
நசிந்து உடைந்து நொருங்கின
வலிய கூட்டில் அடைகாத்த முட்டைகள்

தேர் ஒடிந்த வீதியில் போர்ப்பறை
கேட்கிறது
கார்காலம் வருமுன்னே பலவித
நேர்காணல் தொடர்கின்றது

கருகிய கண்ணீர்க்குரல் ஒலியில்
மிதக்கின்றன ஆயுதக் கப்பல்கள்
காகம் இரையூட்டும் இருள்மாலையில்
உருவேற்றும் போர்ப்பாடல்கள்

அறிவு தேடும் பருவத்தில் மது சூது
குழி தோண்டுகிறது சூழல் சமூகம்
கை கால் விலங்கு இறுக்கப்படுகின்றது

மோர்ப்பந்தல் தாகம் தணிக்கிறது
வள்ளல்கள் மொய் எழுதுகின்றனர்

சிற்பத்தின் முகத்தில் மகிழ்ச்சி மலர்கிறது
முள்ளில் நடக்கின்ற பேச்சு வார்த்தைகள்

மரணத்தை மூடியே மழை பெய்கிறது
மரபுத் தொடர்ச்சி பேசுகின்ற அரசியலில்
ஆணவ, கௌரவக் கொலைகள்



வெண்ணெய் உருகவில்லை
வேம்பு காய்க்கவில்லை
வெற்றிலை புதைத்த ஈரமண்ணில்
வியர்வைத் துளிகள் அரும்புகின்றன

எலும்புக் கூடுகளின் முதுகில்
நாற்காலிகள் போட்டு அமர்ந்து
ஆறுதலாக
அரசியல் தீர்வு பேசுகின்றன
எரிகுண்டுச் சாம்பல் பொம்மைகள்



முத்துராஜா

# காலையில் அழலாமோ பாப்பா?



அழுது புரளாதே பாப்பா! -காலையில்
..அழுது புரளாதே!
அழுது புரள்கிறதா மைனா - உன்போல்
..அரற்றித் திரிகிறதா?..(பாப்பா!அழுது..)

காலை எழுந்ததும் பாப்பா! - வெளியில்
..காற்றை நுகர்ந்திடடீ!
தோலுக்கு நல்லதடீ -பாப்பா!
..துணிச்சல் கொடுக்குமடீ!

காலையில் மாமரக் குயில்கள்பார்!-அழகாய்
..கானம் இசைக்குது பாரடீநீ!
சோலையில் உள்ள பறவையெல்லாம்-ஆகா[பாப்பா]-
..சுற்றிவிளை யாடுதடீ!

தூங்கி எழுந்ததும் அழலாமோ? - பாப்பா!
..துக்கிரி என்றுனை அழைப்பரடீ!
வாங்கிக் குடித்துப்பாலை,- பின்பு
..வாசலில் பறவைகள்பார்!

மயில்கள் ஆடுதல்பார்! தெருவில்-பசுவும்
..மகவுக்கு ஊட்டுதல்பார்!
ஒயிலாய்க் கோழிகளும் அதோ!-குப்பையில்
..உணவைத் தேடுதல்பார்!

நாய்களும் வால்குழைத்து வந்தே-உன்னிடம்
..நல்ல 'பிஸ்கட்' கேட்கலையோ?
பாய்கிற ஆட்டுக்குட்டி-உன்றன்
..பாதத்தை நக்கலையோ?

படுக்கையை விட்டெழுந்து பாப்பா!-நல்ல
..பழக்கமே கொள்ளவேணும்!
துடுக்குத் தனம்-விட்டுநீ-என்றும்
.. சிரிக்கப் பழகவேணும்!-பாப்பா!
..சிரிக்கப் பழகவேணும்!

கவியோகிவேதம்

# A New Project by

TRIDEL®
BUILT FOR LIFE

## @ 60 Queen St. East, Toronto
## (Queen + Church)



- 57 Storeys
- 445 Units
- 2 Blocks East of Yange Street
- Height 60Ft. (185.9m)

Developers : TRIDEL & BAZIS
Architect : Core Architect

*For More information Feel Free to Call .....*

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
**Tel: 416-321-6969**
* Independently owned and operated.













# இலங்கையின் பொருளாதார நெருக்கடி மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் பாதிப்பு



யதுசனா சவுந்தரராசா
அகவை 18

இலங்கையில் அண்மைக்காலமாக அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் அசாதாரணமான சூழ்நிலை நிலவி வருகின்றது. நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் நாளாந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கே ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடற்று அனைவரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலட்சக்கணக்கான மக்கள் உணவு, எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் மருந்துப் பற்றாக்குறையை எதிர் கொள்வதால் இலங்கையில் பொருளாதார நெருக்கடியானது மனிதாபிமானமான அவசர நிலையாக மாறியுள்ளது என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எச்சரித்துள்ளது. ஒளிவேகத்தை மிஞ்சும் கதியில் அதிகரித்துச் செல்லும் விலை வாசியானது ஒருபுறம் இருக்க தேவையான பொருட்களைப் போதிய அளவில் பெற்றுக் கொள்ள முடியாத வகையில் அத்தியா வசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடும் மக்களைப் பாடாய்ப் படுத்துகின்றது. சாதாரணமாக ஒரு குடும்பத்தின் ஒரு வேளை உணவுக்கு ஏற்படும் செலவு இன்றை நிலையில் ஒரு இறாத்தல் பாண் வாங்குவதற்கே போதாத நிலை ஏற்பட்டுள்ளது.

கோவிட்-19 நோய்த் தொற்றால் ஏற்கனவே நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்பட்ட நிலையில் சிறிது சிறிதாக மீண்டெழும் தறுவாயிலிருந்த மக்களுக்கு தற்போதைய நாட்டுநிலைமை மேலும் பேரழிவை ஏற்படுத்துவதாயுள்ளது. நிரந்தரமான வேலை இல்லாதோர், ஒற்றைப் பெற்றோர் கொண்ட குடும்பங்கள் மற்றும் நாட்டு நிலைமை காரணமாக தொழில் வாய்ப்புக்களை இழந்தோரின் நிலைமை இன்னும் மோசமானது.

விலைவாசி உயர்வு மற்றும் உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடே பிரதானமான பிரச்சினையாகக் காணப்படு கிறது. நாட்டின் பிரதான வருவாய் மூலமாக இருக்கும் சுற்றுலாப் பயணி களின் வருகை கோவிட்-19 தாக்கத்தின் பிற்பாடு குறைவடைந்த நிலையில், அதிகரித்த பணவீக்கம் மற்றும் ஏற்றுமதி,



இறக்குமதி வியாபாரத்தின் தளர்வு போன்றனவும் பிரதிகூலமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. மேலும், விவசாயத் துறையில் ஏற்படுத்தப்பட்ட திடீர் மாற்றங்கள் காரணமாகப் பயிர்ச் செய்கைக் காலங்களைக் கடந்தும் பயிர் நிலங்கள் வெறுமையான தரிசு நிலங்களாகக் காட்சியளிப்பது மனதுக்கு வேதனையளிக்கின்றது.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு அன்றாட வாழ்க்கையை மிகவும் பாதித்துள்ளது. வாகனங்களுக் கான எரிபொருளுக்காக நீண்டநேரம் வரிசையில் காத்திருக்கும் மக்கள் ஒரு புறம் பொதுப்போக்குவரத்து வாகனங் களின் கட்டண அதிகரிப்பால் பாதிக்கப் படும் மக்கள் ஒருபுறம் என அன்றாட தேவைகளுக்கான பிரயாணங்களை மேற் கொள்வதும் சிரமமானதாய் மாறியுள்ளது. எரிபொருள் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படும் இன்னொரு தரப்பினராக மீனவர்களைக் குறிப்பிடலாம். ஆம், எரிபொருள் தட்டுப் பாடு பல தரப்பினரினதும் வாழ்வாதாரத் தையும் பாதித்துள்ளது.

எரிவாயுத் தட்டுப்பாடு, மருந்துத் தட்டுப் பாடு, சுகாதாரப் பாவனைப் பொருட்களின் தட்டுப்பாடு என இவ்வரிசை நீண்டு கொண்டே செல்கின்றது. இளைஞர், நடுத்தர வயதினர் போன்றோர் ஓரளவு இந்நிலைக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய தாக இருப்பினும் குழந்தைகள், வயது முதிர்ந்தோர், நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார் போன்றோர் தினமும் இடை யூறுகளை எதிர்நோக்குகின்றனர்.

நாளாந்தம் தம் வாழ்க்கையைக் கொண்டு நடத்த ஓய்வின்றி உழைக்கும் ஒவ்வொரு குடும்பத் தலைவர்களின் நோக்கமும் குடும்பத்தின் தேவைகளை குறையின்றிப் பூர்த்தி செய்வதும் இயலுமானவரை எதிர்காலத் தேவைகளுக்காகப் பணத்தைச் சேமித்தலுமே. ஆனால், யாரும் எதிர் பாராதவகையில் ஒரு வருட காலத்திலும் குறைந்த காலப்பகுதியில் ஏற்பட்ட இப் பொருளாதார நெருக்கடி நிலையானது ஒவ்வொரு தேவைகளுக்குமான செலவினை மூன்று மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது. ஏற்கனவே தேவை களுக்கேற்ப மட்டுமே செலவு செய்யக் கூடிய நிலையிலிருந்த ஏழை மக்களுக்கு, இந்நிலைமை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல இருக்கிறது.

ஏற்கனவே வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் சுமார் 2.4 மில்லியன் மக்கள் வாழ்வாதார இழப்பு, உணவுப் பற்றாக் குறை மற்றும் அத்தியாவசியப் பொருட் களின் விலை உயர்வால் பாதிக்கப் பட்டுள்ளனர் என புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

நாட்டின் இந்நிலையை மாற்றியமைப்பதும் கைகளில் இல்லாதபோதும் முடிந்தவரை இந்நிலைமையை வெல்ல அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அரசாங்கம் உலக நாடுகளுடன் இணைந்து செயற் பட்டு இதற்கு முடிவு காண முயற்சித் தாலும், ஒவ்வொரு தனிநபரும் தம்மால் இயலுமானால் பிறருக்கு உதவ முன் வருவது வரவேற்கத்தக்கதாகும்.

ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி அனைவருமே இதனால் பாதிக்கப்பட்டுள்ள னர் என்பது மறுப்பதற்கில்லை. இருந்தப் போதிலும் எம்மால் இயலுமிடத்து எம்மிடம் மேலதிகமாக இருக்கும் வளங்களை பிறருடன் பகிர்ந்து அனைவரும் பசியாற உதவுவோம். இந்நிலை விரைவில் மாறும் எனப் பிரார்த்தித்து அனைவரும் ஒன்றிந்து செயற்படுவோமாக.

